ISSUE 01

2022 / AUGUST

www.facebook.com

www.twitter.com

www.youtube.com



# புதிய அரசியலமைப்பிற்கான சவால்


08

**இலங்கையின் உத்தியோகபூர்வ பெயர் தொடர்பிலும் புதிதாகச் சிந்திக்க வேண்டிய தருணம்.**

- பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

17

**மக்கள் பங்கேற்புடனேயே அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.**

- எரான் விக்கிரமரத்ன


VOC

VOICE OF CITIZENS


CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்



21

**கட்சிகளின் உள்ளக சனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.**

- ஹரினி அமரசூரிய உயன்கொட

26

**பழைய முறையை ஓரங்கட்டி புதிதாக சிந்திக்க வேண்டும்**

- எம்.ஏ. சுமந்திரன்

2022 / AUGUST

ISSUE 01

**ஆசிரியர்**

லயனல் குருகே
ஜயசிரி ஜயசேகர

**பக்க வடிவமைப்பு**

நலிந்த செனெவிரத்ன

**பக்கத்திற்கான புகைப்படங்கள** twitter.com/thrimaz
**ஏனைய புகைப்படங்கள்** facebook.com

---


இப் பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள், இவற்றுள் மேற்படி ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு அவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்புக் கூறுவதோடு அவை கட்டாயமாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் கருத்துக்களை பிரதிபலிக்கமாட்டா.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாகத் திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு - 05, இலங்கை
தொலைபேசி : +9411 2081384, +94112081385, +94112081386
ஃபக்ஸ் : +9411 2081388

**மின்னஞ்சல்** : info@cpalanka.org
**இணையதளம்** : www.cpalanka.org
**∴பேஸ் புக்** : www.facebook.com/cpasl
**டுவிட்டர்** : @cpasl


# உள்ளடக்கம்



08

இலங்கையின் உத்தியோகபூர்வ பெயர் தொடர்பிலும் புதிதாகச் சிந்திக்க வேண்டிய தருணம்.

- பேராசிரியர் ஜயதேவ உயன்கொட



17

மக்கள் பங்கேற்புடனேயே அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

- எரான் விக்கிரமரத்ன



19

தேர்தல் முறையிலும் மாற்றம் தேவை

- தயாசிறி ஜயசேக்கர



21

கட்சிகளின் உள்ளக சனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.


- ஹரினி அமரசூரிய உயன்கொட




## 24

**போராட்டத்தில் கட்டுண்டு அரசியலமைப்புகளைத் தயாரிப்பது நாட்டில் இடி விழுவதற்கு ஒப்பாகும்.**


- பிரசன்ன ரணதுங்க


## 26

**பழைய முறையை ஓரங்கட்டி புதிதாக சிந்திக்க வேண்டும்**

- எம்.ஏ. சுமந்திரன்


## 28

**அரசியலமைப்புத் திருத்தமொன்றை விரைவில் நிறைவேற்ற வேண்டும்.**

- ரவூஃப் ஹக்கீம்





## 30

**இந்தப் பாராளுமன்றத்தால் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவர முடியாது.**

- மனோ கணேசன்



33

**அபிவிருத்திக்கும் அரசியலமைப்பு ரீதியான சமநிலை அவசியம்**

- பாட்டலி சம்பிக்க ரணவக்க



37

**எல்லை நிர்ணயம் தொடர்பில் மாற்று முன்மொழிவு**

- மயில்வாகணம் திலகராஜ்



40

**முழுமையான சீர்திருத்தமொன்று உடனடியாகத் தேவை.**

- வீரசுமன வீரசிங்ஹ



45

**கூட்டமைப்பு அரசியலமைப்பே எமது முன்மொழிவு**

- சீ. வீ. விக்னேஸ்வரன்

# போராட்டத்தின் சமிக்ஞையை புரிந்துகொள்ளல்



“பிரஜைகள் குரல்” என்பது இந்த நாட்டின் மக்களின் குரலை சமூக மயப்படுத்தும், பிஜைகளுக்கு முக்கியம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக பரந்த கலந்துரையாடலை மேம்படுத்தும் நோக்காகக் கொண்ட வெளியீடாகும். 25 வருடகாலமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கட்டியெழுப்பிய சமூகசார் கலந்துரையாடலை இச்சந்தர்ப்பத்தில் மேலும் தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென சிந்தித்தோம். அதற்கமைய இந்த வெளியீடு மும்மொழிகளிலும் வெளியிடப்படவுள்ளதுடன், இக் கலந்துரையாடல்களை சமூக ஊடகத்தில் வீடியோப் பதிவுகளாக வெளியிடுவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

அரசியலமைப்பு உருவாக்கம் என்பது நாட்டின் மிக முக்கியமான செயற்பாடாகும். சோல்பரி அரசியலமைப்பு தொடக்கம் 78 வது அரசியலமைப்பு வரையும், அன்றிலிருந்து இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு உருவாக்க செயல்முறைகளில் இந்த சமூகத்தில் வாழும் மக்களது உண்மையான வாழ்வியல் எதிர்ப்பார்ப்புக்கள் பிரதிநித்துப்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகின்றது. 71 ஆண்டு கிளர்ச்சியில் முன்வைக்கப்பட்ட செய்தியை புரிந்துகொண்ட வகையில், 78 ஆண்டு அரசியலமைப்பு அமைந்திருக்கவில்லை. 20வது தடவைகள் சீர்திருத்தப்பட்டு இன்றுவரை அமுலிலுள்ள 78வது அரசியலமைப்பு, 40 வருடங்களுக்கு மேலாக அமுலில் இருக்கும் காலப்பகுதியில் வடக்கிலும் தெற்கிலும் இரண்டு கிளர்ச்சிகளால் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பிரஜைகளாக தமது உரிமைகளை கோரும் வடக்கு மக்களது பிரச்சினைகள் 30 வருட கால யுத்தமாக வளரும் வரை அதற்குறிய நியாயமான தீர்வை வழங்குவதற்கு அரசு தவறியது. யுத்தம் நிறைவடைந்து பத்து வருடத்திற்கும் அதிகமான காலம் கடந்தும் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

88-89 களில் தெற்கு இளைஞர் கிளர்ச்சிகளின் ஊடாக முன்வைக்கப்பட்ட சமிக்ஞையை புரிந்துகொள்வதற்கும் ஆட்சியாளர்கள் தேர்ச்சி பெறவில்லை. சுதந்திரத்தின் பின்னர் கடந்த 75 வருடகாலமாக சமூகத்தால் முன்வைக்கப்பட்ட பாரதூரமான எவ்வித சமிக்ஞைகளையும் எந்த ஒரு ஆட்சியாளரும் புரிந்துகொள்ளவில்லை என்பது மேலும் தெளிவாகின்றது.

கடந்த நாட்களில் மேலெழுந்த மக்கள் போராட்டம், அண்மைக்கால வரலாற்றின் மிகவும் முக்கிய போராட்டம் ஆகும். இதில் பல சாதகமான அம்சங்களும், சில பாதாகமான அம்சங்களும் காணப்பட்டன. இதன் சிறப்பம்சம் யாதெனில் வன்முறையற்ற மற்றும் மிகவும் ஆக்கப்பூர்வமான

போராட்டமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 71 மற்றும் 88-89 இளைஞர் கிளர்ச்சி சிறு ஆயுத கிளர்ச்சியாக அமைந்திருந்தது. இந்த போராட்டத்தில் பங்கேற்ற

இளைஞர் குழு 88-89 தலைமுறையினரினதும் பிள்ளைகளாகவும் 71 தலைமுறையினரின் பேரப்பிள்ளைகளாகவும் இருக்கலாம். இவர்களது போராட்ட முறை முற்றிலும் அஹிம்சையானது. அத்தோடு, இன, மத, பகுப்பு, கிராமிய-நகர, ஆண் - பெண் போன்ற எவ்வித பேதங்களுமின்றி அனைவரையும் ஒருங்கிணைக்கும் வலிமையும், அனைவருக்கும் சம அந்தஸ்துக் காணப்பட்டமையும் இப்போராட்டத்தின் சிறப்பம்சமாகும். மேற்குறிப்பிட்டவாரான பல சாதகமான அம்சங்கள் இதனூடாக மேலெழுந்தன. ஆனபோதும் இந்த போராட்டத்தின் பின்னரும், அதன் சமிக்ஞைகளை புரிந்துகொள்ளாது வழக்கமான முறையில் முன்நோக்கி நகர்வதற்கான முயற்சியை அரசாங்க தர்பினர் மேற்கொள்வது கவலைக்குரிய விடயாமாகும். அமைச்சரவை, அமைச்சர் மற்றும் இறுதியாக ஜனாதிபதி வரை பதவி விலகுவதற்கு காரணமாயிருந்த தற்போதைய போராட்டத்திற்கு வெறுப்புடன் பதில் அளிப்பதை மிகத்தெளிவாக காணமுடிகின்றது. இது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய தன்மையாகும். இப்பின்னணியில் எமது முயற்சியானது, போராட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட "முறையில் மாற்றத்தை ஏற்படுத்தல்" என்ற விடயம் குறித்து கலந்துரையாடலை ஏற்படுத்துவதாகும்.

**இவர்களது போராட்ட முறை முற்றிலும் அஹிம்சையானது. அத்தோடு, இன, மத, பகுப்பு, கிராமிய-நகர, ஆண் - பெண் போன்ற எவ்வித பேதங்களுமின்றி அனைவரையும் ஒருங்கிணைக்கும் வலிமையும், அனைவருக்கும் சம அந்தஸ்துக் காணப்பட்டமையும் இப்போராட்டத்தின் சிறப்பம்சமாகும்.**

நாட்டின் அரசியலமைப்பு அந்நாட்டின் அனைத்து பிரஜைகளினதும் கௌரவத்திற்கும் ஏற்றுக் கொள்ளலுக்கும் ஏற்புடையதாக அமைந்திருக்க வேண்டும். அத்தோடு அரசியலமைப்பை உருவாக்க செயல்முறையும் பிரபுகள் மட்டத்தில், அரசியல் கட்சிகளது பொறுப்பு என மட்டுப்படுத்தாது சமூகத்தின் பல்வேறு தரப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினரது பங்கேற்புடன் பரந்த கலந்துரையாடலின் மூலம் மேற்கொள்ள வேண்டியதொன்றாகும். அது ஒருசில நாட்களில் தயாரிக்கக்கூடிய விடயமொன்றல்ல. இதன் போது ஒரு வரைபில்லாது பல வரைபுகள் தயாரிக்கப்படலாம். எனினும், இறுதி வரைபு பொதுமக்கள் மத்தியில் பரந்தளவில் கலந்துரையாடப்பட வேண்டும். எமது முயற்சியானது புதிய அரசியலமைப்பு உருவாக்குதலில் மேற்குறிப்பிட்டவாறு கலந்துரையாடலை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

அதன் முதல் கட்டமாக, நடைமுறையில் செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ள கட்சித் தலைவர்கள் மேற்படி விடயம் குறித்து எந்த அளவிற்கு விழிப்புணர்வுடன் உள்ளனர் என்பதுகுறித்து விசாரித்துப் பார்த்தோம். மேலும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் அவர்கள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பது குறித்தும், ஜனநாயகத்தை வலுவூட்டுதல் மற்றும் கட்சி உள்ளக ஜனநாயகம் போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடினோம்.


எதிர்காலத்தில் மேலும் பல தரப்பினருடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம். விசேடமாக இதுகுறித்து நிபுணர்களது கருத்துக்களை சமூகத்திடம் கொண்டு சேர்ப்பதற்கும், கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றோம். பேராசிரியர் ஜயதேவ உயங்கொட அவர்களது கருத்துக்களை இந்த இதழில் இணைப்பதன் நோக்கம் அதுவே. அச்சு வெளியீடுத் துறை முன்கொடுத்துள்ள சவால்கள் காரணமாக ஆரம்பத்தில் இவ்விதழ் இலத்திரனியல் வெளியீடாக மாத்திரம் வெளியிடுவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். ஆனபோதும் எதிர்காலத்தில் இதன் பிரதான விடயங்கள் தொடர்பில் திறந்த சமூகக் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவது எமது எதிர்பார்ப்பாகும்.

இக்கலந்துரையாடலுடன் இணைந்து இச்செயன்முறையை மேலும் மேம்படுத்துவற்கு பல்கலைக்கழக சமூக, தொழில் வாண்மையாளர்கள் மற்றும் இதுகுறித்து ஆர்வம் செலுத்தும் பிரஜைகளையும் அழைக்கிறோம்.

**பதிப்பாசிரியர்**

# இலங்கையின் உத்தியோகபூர்வ பெயர் தொடர்பிலும் புதிதாகச் சிந்திக்க வேண்டிய தருணம்.

பேராசிரியர் ஜயதேவ உயன்கொட



இலங்கையில் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவாதம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. புதிய அரசிலமைப்பொன்றின் பண்பு, உள்ளடக்கம் என்பன எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இனங் காண்பதற்கு அது புதுப்பிக்கப்பட்டிருக்கும் பின்னணியைப் புரிந்து கொள்வது முக்கியம். கடந்த நான்கைந்து மாத காலத்தில், இலங்கையின் பிரசைகள் இயக்கம், இலங்கையின் சனநாயகச் செயற்பாட்டில் மிக முக்கியமான சந்தர்ப்பம். ஏனெனில், பிரசைகள் அரசியல் ரீதியாக விழிப்புற்று, சீர்திருத்தங்கள் அவசியம் என்ற கருத்து மிகக் கடுமையாகத் தோன்றியது. இதற்கு முன்னர் அரசியலமைப்பு சீர்திருத்தம் அவசியம் என்ற கருத்து உயர்மட்ட அரசியல்வாதிகளிடம் இருந்துதான் கொண்டு வரப்பட்டது. அல்லது அரசியற் கட்சியாளர்களிடமிருந்து அதுவுமல்லாவிடில், சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடம் இருந்துதான் கொண்டு வரப்பட்டது. இம்முறை அந்த முன்மொழிவு பொதுவான பிரசைகளிடமிருந்து எழுந்துள்ளமை அதன் சிறப்பம்சமாகும். பொதுமக்கள் பிரதானமான

**பிரசைகள் இயக்கத்தில் மேலுமொரு கோஷம் எழுந்தது. சிலர் அதனை விரும்பவும் இல்லை. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மட்டுமல்ல பாராளுமன்றத்தில் இருக்கின்ற 225 பிரதிநிதிகளும் போக வேண்டும் என்ற கோஷம். பிரதிநிதித்துவ சனநாயகத்தில் இலங்கையில் காணப்படும் பிரதானமான நிறுவனமான பாராளுமன்றம் தொடர்பில் பிரசைகளின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்திருப்பதே அதன் மூலம் கருதப்பட்டது.**

இரண்டு தலைப்புகளைத் தோற்றுவித்தனர். அதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

முதலாவது, அவர்கள் இலங்கையின் அரசியல் முறைமை, ஆட்சி முறைமை, அரசியல் கட்டமைப்பு என்பன தொடர்பில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தனர். நடைமுறையிலுள்ள அரசியல் முறைமை தொடர்பிலான விரக்தியும் விமர்சனத்தின் வெளிப்பாடுதான் சிஸ்டம் சேஞ்ச் வேண்டும் என்ற கோஷம் வந்ததும், புதிய அரசியற் கலாசாரமொன்று வேண்டும் என்று சொன்னதும், இப்போது இருக்கின்ற அரசியற் கட்சிகள் மீதும் மந்திரிமார்கள் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது என்று சொன்னதும். மிகவும் சீர்குலைந்த சனநாயகமொன்று இலங்கையின் சனநாயகத்தின் ஒரு அம்சம். இதோ இந்த சீர்குலைந்த சனநாயகம் பற்றிய கடுமையான விமர்சனமொன்று வந்தது. இந்த சீர்குலைந்த சனநாயகம் அடிப்படையில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயகத்தை மையமாகக் கொண்டுமே பணியாற்றுகின்றது.

## பிரசைகள் போராட்டத்தின் சமிக்ஞைகள்

பிரசைகள் இயக்கத்தில் மேலுமொரு கோஷம் எழுந்தது. சிலர் அதனை விரும்பவும் இல்லை. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மட்டுமல்ல பாராளுமன்றத்தில் இருக்கின்ற 225 பிரதிநிதிகளும் போக வேண்டும் என்ற கோஷம். பிரதிநிதித்துவ சனநாயகத்தில் இலங்கையில் காணப்படும் பிரதானமான நிறுவனமான பாராளுமன்றம் தொடர்பில் பிரசைகளின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்திருப்பதே அதன் மூலம் கருதப்பட்டது. ஏனெனில் பாராளுமன்றத்தில் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள் ஊழல் மிக்கவர்கள், மக்களுக்கு சேவையாற்றுவதை விட தமக்கு சேவையாற்றிக் கொள்வதற்கே அவர்கள் மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. அவ்வாறே எந்தவொரு பொறுப்புமின்றி, அரசியல் பலத்தைப் பாவிப்பது போன்ற, காரணங்களால், தாம் வழங்கும் ஆணையின் ஊடாக தம்மை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதில்லை எனப் பிரசைகள் எண்ணுகின்றனர். அவர்கள் வேறு நபர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அதாவது ஒன்றில் கட்சித் தலைவர்கள், கட்சியினது அதிகார வர்க்கம் அல்லது கட்சியின் அரசியல் செயற்பாடுகளுக்கு நிதி வழங்குகின்ற வர்த்தகர்களையே அவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இதனால், தமது துன்ப துயரங்களைப் புரிந்து கொள்ளும், தமது துன்ப துயரங்களையும் கோரிக்கைகளையும் உண்மையிலேயே பிரதிநித்துவம் செய்கின்ற பிரதிநிதிகளே மக்களுக்குத் தேவை. அவ்வாறே தாம் வழங்குகின்ற ஆணையை மீறுவது தொடர்பில் மக்கள் பெரும் விரக்தியடைந்துள்ளனர். அவ்வாறு மீறுகின்ற உறுப்பினர்களை என்ன செய்வது? 5வருடங்கள் கழியும் வரை பார்த்துக் கொண்டிருப்பதா? அதற்கு முன்னர் இவர்களை அகற்றுவதற்கு வழியேதும் இல்லையா? இவ்வாறாக இலங்கையில் காணப்படும் பிரதிநிதித்துவ சனநாயகத்தினதும் பாராளுமன்ற சனநாயகத்தினதும் குறைபாடுகள் தொடர்பில் பெரும் விமர்சனம் எமது பிரசைகளிடமிருந்து எழுந்தது.

இலங்கையில் புதிய அரசியலமைப்பொன்றைப் பற்றி நாம் சிந்திப்பதாயின், நாம் சிந்திக்க வேண்டியது, 19வது திருத்தச் சட்டத்தை மீளக் கொண்டு வருவதா, பாராளுமன்ற சனநாயகத்தை நோக்கி மீண்டும் செல்வதா, என்பது போன்ற கேள்விகளை மட்டும் அல்ல. 19வது திருத்தச் சட்டத்தை திருத்தங்களுடன் மீண்டும் கொண்டு வரவும் வேண்டும். பாராளுமன்ற சனநாயகத்தை நோக்கி திரும்பிச் செல்லவும் வேண்டும், குறிப்பிட்ட அடிப்படைக் கோட்பாட்டுடன் கூடிய நோக்கத்தின் அடிப்படையில் அது அமைய வேண்டும். எனக்குத் தோன்றுகின்ற வகையில், கடந்த நான்கைந்து மாதங்களில் பிரசைகள் இயக்கத்தில் தோன்றிய முக்கியமான அடிப்படைக் கோட்பாட்டுவாதம் இதுவாகத்தான் இருந்தது: அதாவது, இலங்கையின் சனநாயகம் தாராளமயமற்ற (illiberal democracy) மிக கடுமையான அதிகாரவாத ஜனாதிபதி முறைமையில் உருக்குலைக்கப்பட்ட சனநாயக முறைமையொன்று. பிளாஸ்த்திரி என்ற சொல்லால் அழைக்கப்படும் மேலோட்டமான மாற்றங்கள் எமக்கு அவசியமில்லை. அடிப்படை சீர்திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்ற, இலங்கையின் சனநாயகத்தை மீளக் கட்டியெழுப்பும் ஆழமான மற்றும் விரிவாக்கற் செயற்பாட்டுடன் தொடர்புபடுத்த வேண்டும்.

## பிரதிநிதித்துவ சனநாயகத்தின் எல்லைகள்

இலங்கையின் அரசியற் சனநாயகமாக்கல் தொடர்பான புதிய பருவமொன்றிலேயே நாம் இருக்கின்றோம். இந்தப் புதிய தருணத்தை எவ்வாறு அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்காகப் பயன்படுத்துவது? அப்போது நாம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை அரசியலமைப்பில் மேலோட்டமாக மாற்றியமைக்கின்ற நோக்கில் பார்க்கக் கூடாது. இலங்கையின் ஒட்டுமொத்த அரசியல், ஒட்டுமொத்த

**மக்களால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் திருப்பியழைக்கும் அதிகாரம் அரசியலமைப்பு ரீதியாகக் காணப்பட வேண்டும் என்ற கருத்து சில அரசியற் கட்சிகளிலிருந்தும் குழுக்களிடமிருந்தும் எழுகின்றது. அது மிக முக்கியமான கருத்தாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.**

அரசியலமைப்புக் கட்டமைப்பு, அரசியற் கலாசாரம், அரசு மற்றும் பிரசைகளுக்கிடையில் காணப்படும் தொடர்பு, ஆட்சியாளர்கள் மற்றும் மக்களிடையே காணப்படுகின்ற தொடர்பைப் புதுப்பித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படை ரீதியான சீர்திருத்தக் கட்டமைப்பொன்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

இதோ இந்த அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கரு ரீதியான சார்பு எதுவென்பது, அரசியலமைப்பின் கொள்கை ரீதியான பகுதி என நான் நினைக்கின்றேன். அது தொடர்பான கலந்துரையாடலொன்று இலங்கையில் ஏற்பட வேண்டும் என நான் உறுதியாக நம்புகின்றேன். அரசியலமைப்பை சீர்திருத்துவதாயின், பிரதிநிதித்துவ சனநாயகத்தின் வரையறுக்கப்பட்ட கட்டமைப்பில் மட்டுமே அதனை மேற்கொள்ள வேண்டும் என இன்னமும் பலர் நினைத்துக் கொண்டிருப்பதே அதற்குக் காரணம். எனினும் கடந்த காலத்தில் சில அரசியற் கட்சிகளிலிருந்து விடுக்கப்பட்ட கருத்துகளை பார்க்கின்ற போது, நாம் மரபுரீதியான தாராளமய பிரதிநிதித்துவ சனநாயக எல்லையைக் கடந்து செல்ல வேண்டும் என்ற கருத்து முன்மொழியப்படுவது தெரிகிறது. நான் ஒரு நிதர்சனத்தைக் குறிப்பிடுகின்றேன். மக்களால் நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைத் திருப்பியழைக்கும் அதிகாரம் அரசியலமைப்பு ரீதியாகக் காணப்பட வேண்டும் என்ற கருத்து சில அரசியற் கட்சிகளிலிருந்தும் குழுக்களிடமிருந்தும் எழுகின்றது. அது மிக முக்கியமான கருத்தாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. என்றாலும் இந்த விடயத்தில் ஒரு சிக்கல் உள்ளது. தாராளமய சனநாயகத்தில் திருப்பியழைப்பதற்கான (Right to Recall) வாய்ப்பு கிடைப்பதில்லை. இலங்கையில் இருக்கும் அரசியலமைப்பைப் பற்றிச் சிந்திக்கின்ற பொதுவாக தாராளமய சனநாயகக் கட்டமைப்பின் மூலம் மட்டும் இந்தப் பிரச்சனையைப் பார்க்கின்றவர்கள் பெரும்பாலும் இந்த முன்மொழிவை எதிர்ப்பார்கள். அதனை நான் நன்கறிவேன். சனநாயகம் தொடர்பான தாராளமய கோட்பாட்டில் சுபைாவ வழ சுநஉயடடற்கான வாய்ப்பில்லை. உண்மையில் குடியரசுவாத அரசியற் கோட்பாட்டிலும் நேரடியான சனநாயக மரபிலுமே திருப்பியழைப்பதற்கான (Right to Recall) வாய்ப்புகள் தோன்றும்.

இலங்கையில் நாம் புதிதாக அரசியலமைப்பில் சீர்திருத்தம் செய்வதாயின் எமது பிரசைகளின் கோரிக்கைகளையும் செவிமடுத்துக் கொண்டு, சனநாயக முறைமையில் காணப்படும் குறைகளை தீர்ப்பதற்காக செயற்படுவதாயின், சனநாயகத்தினதும் தாராளமய பிரதிநிதித்துவ சனநாயகத்தின் மட்டுப்பட்ட கட்டமைப்பிற்குள் மாத்திரம் இருக்க முடியாது. அதனை மேலும் நாம் ஆழமானமாக மாற்ற வேண்டும். இல்லையேல் விரிவாக்க வேண்டும். அதற்கென எம்மிடம் இரு ஆதாரங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று குடியரசு சனநாயகம், மற்றையது, நேரடி சனநாயகம். நேரடி சனநாயகம் எனப்படுவது, தாம் நேரடியாக சட்டவாக்கம், ஆளுகைச் செயற்பாடுகள் போன்றவற்றில் பங்கேற்கக் கூடிய முறை.

## சீர்திருத்தத்திற்கான ஆக்கபூர்வமான பிரவேசம்

இலங்கையில் அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயற்பாடொன்றைப் பற்றிச் சிந்திக்கும் போது, நான் முதலில் ஆலோசித்ததைப் போன்று, தாராளமய சனநாயத்தையும் பிரதிநிதித்துவ சனநாயகத்தையும் கைவிடாமல், அவற்றைப் பேணிச் செல்வதுடன், நேரடி மற்றும் குடியரசு சனநாயகங்களின் அம்சங்களை ஆக்கபூர்வமாக எவ்வாறு இணைத்துக் கொள்ளலாம் என்பதற்கான கலந்துரையாடல் அவசியம். ஆனால் இன்னமும் அக் கலந்துரையாடல் இலங்கையில் தோன்றவில்லை. அது சிலவேளை நாம் சிந்திக்கின்ற வகையில் அமைந்த புதிய அரசியல் சிந்தனையொன்றின் அடிப்படையில் அமைந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்களைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக அமையலாம். முதலில் நாம் செய்ய வேண்டியது, இலங்கையில் பிரசைகள் இயக்கத்தின் ஊடாகத்

தோன்றிய இலங்கையின் அரசியல் முறை மற்றும் ஆளுகை தொடர்பிலான விமர்சனம் மட்டுமல்ல, நடைமுறையிலுள்ள சனநாயக முறைமையைப் பற்றிய விமர்சனங்களையும் கவனத்திற் கொண்டு புதிதாகச் சிந்திக்க வேண்டும் என்றே நான் நினைக்கின்றேன். உண்மையில் புதிதாகச் சிந்திப்பதற்கு உலகின் ஏனைய நாடுகளின் எடுத்துக்காட்டுகளை நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும். நான் சில உதாரணங்களைக் கூறுகின்றேன்.

இந்தியா: இந்தியாவின் அரசியலமைப்பு 1947ல் அரசியலமைப்புச் சபையொன்றினால் தயாரிக்கப்பட்டது. உண்மையில் அது அரசியலமைப்பு மற்றும் மூன்று அரசியற் சிந்தனை மரபுகளை ஒன்றுசேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது. அதிலே தாராளமய சனநாயகம் உள்ளது. குடியரசு சனநாயகம் உள்ளது. சோசலிசம் அல்லது சமூக சனநாயக மரபு காணப்படுகின்றது. அம்மூன்று பண்புகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. அது ஒருபோதும் பிரித்தானியாவினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட தாராளமய சனநாயகத்தின் எல்லைக்குள் சிறைப்படவில்லை. எனவே நாம் அவ்வாறான மரபுகளிலிருந்து கற்றுக் கொள்வதற்கு பல விடயங்கள் உள்ளன. அமெரிக்க அரசியலமைப்பைக் கருத்திற் கொண்டால், அமெரிக்க அரசியலமைப்பு தாராளமய அரசியலமைப்பு மாத்திரமே அல்ல என்பது

**இலங்கையில் பிரசைகள் இயக்கத்தின் ஊடாகத் தோன்றிய இலங்கையின் அரசியல் முறை மற்றும் ஆளுகை தொடர்பிலான விமர்சனம் மட்டுமல்ல, நடைமுறையிலுள்ள சனநாயக முறைமையைப் பற்றிய விமர்சனங்களையும் கவனத்திற் கொண்டு புதிதாகச் சிந்திக்க வேண்டும் என்றே நான் நினைக்கின்றேன். உண்மையில் புதிதாகச் சிந்திப்பதற்கு உலகின் ஏனைய நாடுகளின் எடுத்துக்காட்டுகளை நாம் ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.**

பெரும்பாலானவர்களால் மறக்கப்பட்ட விடயம். அதிலே குடியரசு அம்சங்கள் மிகவும் வலுவாகக் காணப்படுகின்றன. சுவிட்சர்லாந்திலும் அவ்வாறே.

மூன்றாம் உலக நாடுகளில் ஒரு எடுத்துக்காட்டாக சிலீ நாட்டில் அண்மையில் இலங்கையைப் போன்றே ஒரு பாரிய மக்கள் எழுச்சி தோன்றியது. இரண்டு மூன்று வருடங்களாக அது தொடர்ந்தது. இப்போது சிலீ நாட்டில் மக்கள் இயக்கத்தின் ஊடாகத் தோன்றிய கருத்துகளையும் எடுத்துக் கொண்டு, புதிய அரசியலமைப்புக்கான பாரிய கலந்துரையாடல் காணப்படுகின்றது. இந்நாட்களில் அரசியலமைப்புச் சபைகள் அரசியலமைப்பொன்றை உருவாக்குகின்றன. அவர்களும் பிரசைகள் இயக்கத்தின் ஊடாக தோன்றிய கருத்துகளையும் நடைமுறையிலுள்ள மேலாதிக்க தாராளமய சனநாயகத்தின் அரசியலமைப்புவாதச் சிந்தனையை வலுப்படுத்துவதிலும் அதன் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலும் தொடர்புபடுத்துகின்றனர். எனினும் வழக்கமான தாராளமய அரசியலமைப்புவாதிகளும் வலதுசாரிப் பிரிவினரும் அதற்கு இணங்கமாட்டார்கள். இலங்கையிலும் இது இடம்பெறலாம். வலதுசாரி பிரிவினர், இப்போது அந்த சீர்குலைந்த பாராளுமன்ற சனநாயகத்திலிருந்து நன்மை பெறும் சமூக வர்க்கத்தில் இருக்கின்ற நபர்கள் இது திருத்தப்படுவதை விரும்ப மாட்டார்கள். அதனால் தான், இலங்கையில் பிரசைகள் இயக்கம் இப்போதைக்கு பின்னடைவுக்கு ஆளாகியிருந்தாலும் எதிர்வரும் காலங்களில் இலங்கையில் அரசியலில் இன்றியமையாத முக்கிய காரணியாக இருக்க வேண்டும் நான் நினைக்கின்றேன்.

## வலுவான கட்டுப்பாட்டு மற்றும் சமப்படுத்தல் முறை

அதற்கு நான் இன்னொரு காரணத்தைக் குறிப்பிடுகின்றேன். அரசியலமைப்பு விவாதத்தில் மிக முக்கியமான தர்க்கமொன்று எழுகின்றது. அரசியல் அதிகாரம் முறையற்ற விதத்தில் ஆட்சியாளர்களால் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மக்களைப் பாதிக்கும் வகையில் பாவிப்பதற்கான வாய்ப்பைத் தவிர்ப்பதற்கு அரசியலமைப்பினாலேயே தீர்மானிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு மற்றும் சமநிலை முறையொன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற விடயம். அமெரிக்க அரசியலமைப்பு மரபில் அவ்வாறான மிக வலிமையான கட்டுப்பாட்டு மற்றும் சமப்படுத்தும் முறைகள் காணப்படுகின்றன. சட்டசபையோ நிறைவேற்று அதிகாரமோ

தன்னிச்சையாக மக்களைப் பாதிக்கின்ற வகையில் செயற்பட முடியாது. அங்கே ஒரு நிறுவனத்தால் ஏனைய நிறுவனம் நிர்வகிக்கப்படுகின்றது. அவ்வாறே சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிக்க வேண்டும் என்பது இலங்கையில் காணப்படுகின்ற முக்கியமான ஆலோசனையாகும். சுயாதீன ஆணைக்குழுக்கள் மிக முக்கியமானவை என்பதைப் போன்றே, அதுவும் கட்டுப்பாட்டு மற்றும் சமப்படுத்தும் முறையாகின்றது. எனினும் எம்மிடம் கடந்த காலத்தில் பிரசைகள் இயக்கத்தின் மூலம் தோன்றிய மிக முக்கியமான கருத்தொன்று உள்ளது. பிரசைகள் இயக்கத்தில் உள்ள செயற்பாட்டாளர்கள் இது பற்றி சிந்தித்திருப்பார்களா எனத் தெரியாது. ஆனால் அதனைக் கண்காணித்தவர் என்ற வகையில், அரச அதிகாரம், அரசியல் என்பவற்றை யாரேனும் முறைகேடாகப் பயன்படுத்துவார்களாயின், மக்களைப் பாதிக்கின்றவாறு அதனைப் பாவிப்பார்களாயின் அதனை தடுப்பதற்காக ஒருங்கிணைந்த பிரசைகள் மிகவும் வலுவான கட்டுப்பாடாகக் காணப்படுகின்றார்கள் என்பதையே நான் அவதானிக்கின்றேன். இது சமூகத்திலிருந்து, பிரசைகளிலிருந்து தோன்றும் கட்டுப்பாடாகும்.

அப்போது அடுத்த அரசியலமைப்பில், மரபு ரீதியான நிறுவனமயப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் சமப்படுத்தல் முறைகளுக்கு மேலதிகமாக இலங்கைப் பிரசைகளிடமிருந்து தமது ஆக்கபூர்வமான அரசியலிடமிருந்து முன்மொழியப்படும் கருத்துகளையும் எவ்வாறு அரசியலமைப்பில் உள்ளடக்குவது என்பதை நாம் பார்க்க வேண்டும். பெரும்பாலான வேளைகளில் மரபுரீதியான அரசியலமைப்புகள் பற்றிச் சிந்திக்கும் அநேகமானவர்கள், இவ்வாறான இடங்களில் இது சனநாயக ரீதியானது அல்ல, தொழில்நுட்ப ரீதியாக மிகச் சிரமமானது எனக் குறிப்பிடலாம். உதாரணமாக, நாம் பேசுகின்ற, திருப்பியழைக்கும் அதிகாரத்தை எதிர்ப்பதற்கு அது தொழில்நுட்ப ரீதியாக மிகச் சிக்கல் வாய்ந்ததாக இருப்பது காரணமாக அமையலாம் என்பது எனக்குத் தெரியும். வேறு நாடுகளில் அனுபவங்கள் உள்ளன. அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் பலவற்றில் அனுபவங்கள் காணப்படுகின்றன. அவ்வனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொண்டு அச்சிக்கல் நிலையைக் கருதாது, முறையற்ற ரீதியில் பாவிக்கப்படுவதற்கு இடம் கிடைக்காதவாறு தேவையான திருத்தங்களுடன் பிரசைகளுக்கு எவ்வாறு சனநாயக ரீதியான வலிமையைப் பெற்றுக் கொடுக்கலாம் என்பதை நோக்க வேண்டும்.

## அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடு சனநாயக ரீதியானதாக இருத்தல்

உண்மையிலேயே அரசியல் அதிகாரத்தின் ஊற்று பிரசைகள் தான். இம்முறைப் போராட்டத்திலும் இறையாண்மை மக்களிடமே உள்ளது என்ற கருத்து தோன்றியது. அவ்வாறாயின் இறையாண்மையுடன் கூடிய மக்கள் அதிகாரம், அவர்களது விமர்சனம், அவர்களிடமிருந்து அவ்வப்போது தோன்றிய முக்கிய கருத்துகளை எவ்வாறு எமது அரசியலமைப்புச் சிந்தனையில் முதலில் உள்ளடக்குவது என்பதைப் பார்க்க வேண்டும். அரசியலமைப்பில் முந்தைய அரசியலமைப்பு கோட்பாடு மற்றும் சிந்தனையில் இக்கருத்துக்களை உள்ளடக்க வேண்டியேற்படும். அதன் பின்னர்தான் அரசியலமைப்பு ஏற்பாடுகளாக அவற்றை மாற்றியமைக்க வேண்டும். நாம் அரசியலமைப்பு ஏற்பாடுகள் பற்றி சிந்திப்பதற்கு முன்னர், அரசியலமைப்பின் எண்ணக்கரு ரீதியான அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய தெளிவு காணப்பட வேண்டும் என்பதே எனது ஆலோசனை. இந்த அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் போது முதலில் அரசியலமைப்பு தொடர்பான சட்டத்தரணிகள் தனியாக வரைபுகளை அமைக்கின்றார்கள். இது இலங்கையில் செய்யப்படுகின்ற பெரும் தவறு. கடந்த 21, 22ம் திருத்தங்கள் அனைத்தையும் எவ்வாறு செய்தார்கள்? குறைந்தபட்சம் காலிமுகத்திடல் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான பிரதிநிதிகளாவது இருக்கின்றார்கள். அவர்களை யாரும் போய்ச் சந்திக்கவில்லை. அவர்களுடைய கருத்தை என்னவென்று கேட்கவில்லை. ஒரு சட்டத்தரணியோ அல்லது குழுவொன்று இணைந்தோ அரசியலமைப்புச் சட்ட வரைபினைத் தயாரித்து சமர்ப்பிக்கின்றார்கள். அதன் பின்னர், உயர் நீதிமன்றத்துக்குச் சென்று அதனை செல்லுபடியாக்கிக் கொள்கின்றனர். இதுபற்றிய உங்கள் கருத்து என்ன என்பதை மக்களிடம் கேட்பதில்லை. அது முற்றாக சனநாயகரீதியற்ற செயல். அரசியலமைப்புத் திருத்தச் செயற்பாட்டின் உள்ளடக்கம் சனநாயக ரீதியானதாக இருக்க வேண்டும் என்பதே எனது தர்க்கம். திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் செயற்பாடு சனநாயக ரீதியானதாக இருத்தல் வேண்டும். உள்ளடக்கத்தைத் தயாரிப்பது எப்படி? உள்ளடக்கத்தில் எவற்றை உள்ளடக்க வேண்டும் என்ற செயற்பாடுகள் இப்போது சனநாயக ரீதியானதாக இருத்தல் வேண்டும்.

சனநாயகம் என்ற சொல்லைப் புரிந்து கொண்டால், நாம் ஆங்கிலத்தில் அதனை Democracy என்று அழைப்போம். டிமோஸ் என்பவர் யார்? டிமோஸ் என்பவர்கள் பொது மக்கள்

என்பதைக் குறிக்கும். மக்களின் அரசியலமைப்பில், பிரதிநிதித்துவ முறையில் இருக்கின்ற ஒரு தவறு என்னவெனில், வரலாற்று ரீதியாக, இலங்கையில் மட்டுமல்ல, பிரித்தானியாவில் இருந்து எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றது. இந்த முறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட சிறப்புரிமைகள் உள்ள அரசியல் மேலாதிக்கம் ஒட்டுமொத்த அரசியல் செயற்பாட்டையும் தட்டிப் பறித்து, கைப்பற்றிக் கொண்டு, தமது ஏகாதிபத்தியத்தின் கீழ் வைத்துக் கொண்டிருக்க இடமளிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் அதுதான் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கையின் சனநாயகத்தைக் கைப்பற்றிக் கொண்டு பறித்துக் கொண்டுள்ளார்கள். ஊழல்மிக்க அதிகாரத்தை சுயநலத்திற்காக மட்டுமே ஈடுபடுத்துகின்ற அரசியல் வர்க்கமொன்றின் மேலாதிக்கத்தின் மீது பிரசைகள் இயக்கத்திலிருந்து எமது நாட்டின் சனநாயகத்தை தொடர்ந்தும் ஊழல்மிக்க சுயநலவாத உயரடுக்கு வர்க்கத்தின் பிடியிலிருந்து மீட்டல் என்ற வன்மையான வாதம் எழுந்தது. இதனை மீண்டும் மக்களை நோக்கி, பிரசைகளை நோக்கி திரும்பப் பெற வேண்டும். இது அரசியலமைப்புகளை உருவாக்குபவர்கள் சிந்திக்க வேண்டிய விடயம். இதுதான் எங்கள் பிரசைகள் இயக்கத்தின் மூலம் வழங்கும் வலுவான செய்தி. அதனால் தான் 2022ம் ஆண்டில் இலங்கையை மீண்டுமொருமுறை சனநாயக மயமாக்குவதற்கான வாய்ப்பு வரலாற்று ரீதியாகத் திறக்கப்பட்டுள்ளது என நான் நினைக்கின்றேன். இது வரலாற்று ரீதியான தருணம். அந்தத் தருணத்தை நாம் தவறவிடக் கூடாது.

## புதிய அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான பிரவேசம்

இலங்கையை மீண்டும் சனநாயக மயமாக்குவதற்கான வரலாற்று ரீதியான தருணத்தை எவ்வாறு பயன்படுத்துவது? உருக்குலைந்த அரசியல் வர்க்கத்தின் மட்டுப்படுத்தப்பட்ட கருத்துகளால் மட்டுமன்றி பிரசைகளிடமிருந்து வந்துள்ள செறிவான ஆக்கபூர்வமான கருத்துகளை புதிய அரசியலமைப்பில் எவ்வாறு சேர்த்துக் கொள்வது என சிந்திக்க வேண்டும்.

இலங்கை அரசியல் வரலாற்றிலிருந்தும், பிரசைகளின் கடந்தகால அனுபவங்களிலிருந்தும், எம்மிடம் தற்போதுள்ள விமர்சனங்களையும், பிரசைகள் இயக்கத்திலிருந்து எழுந்த விமர்சனங்களையும் கருத்துக்களையும் எடுத்துக் கொண்டு, எவ்வாறு அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான எண்ணக்கரு ரீதியான கட்டமைப்பொன்றைத் தயாரித்துக் கொள்வதென்பது எம்மை நோக்கி எழுகின்ற அடுத்த பிரச்சனையாகும். நாம் அவ்விடத்தில் சில விடயங்களைப் பேச முடியும். முதலாவது விடயம், அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடும் சனநாயக ரீதியானதாக வேண்டும். அரசியலமைப்பு உருவாக்க செயற்பாட்டின் அடிப்படையான கோட்பாட்டுத் தொகுதியில் பாராளுமன்றத் தேர்தலொன்றின் மூலம் மக்கள் ஆணையைப் பெறுவது எம்மிடமுள்ள மேலுமொரு வரலாற்று ரீதியான சந்தர்ப்பம். இது வரைபுபடுத்தப்பட்ட அரசியலமைப்பொன்றுக்கானது அல்ல. அது 1970லும் இடம்பெற்றது. சோல்பரி அரசியலமைப்பை இரத்துச் செய்து, குடியரசு அரசியலமைப்பொன்றை உருவாக்குதல் என்ற கருத்திற்கு மட்டுமே அவர்கள் புதிதாக மக்கள் ஆணையைப் பெற்றார்கள். அடுத்துவரும் தேர்தலொன்றில் அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றிய தமது கட்சியின் அடிப்படை முன்மொழிவுகள், அடிப்படைக் கோட்பாடுகள், மற்றும் அடிப்படைக் கொள்கைக் கட்டமைப்பு என்ன என்பதை தேர்தற் பிரகடனத்தில் உள்ளடக்கி, ஒவ்வொரு கட்சியும் அதற்கான மக்கள் ஆணையைப் பெற வேண்டும் என்பது எமது நாட்டின் அனுபவங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய விடயம். அதுதான் மிகச் சிறந்த சனநாயகமாகும். அரசியலமைப்பு செயற்பாட்டில் மக்களுடைய பங்கேற்பு மக்களின் விருப்பம் ஆகிய இரண்டையும் பெற்றுக் கொள்வது அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாட்டின் முக்கியமான அடிப்படைக் கோட்பாடாகும். மேலும் அரசியலமைப்பு நிபுணர்கள் அல்லது அரசியற் செயற்பாட்டாளரின் பணியாக மட்டும் அது இருக்கக் கூடாது.

## உத்தியோகபூர்வ பெயரை அர்த்தமுள்ளதாக்குதல்

நாம், புதிய அரசியலமைப்பு தொடர்பில் கலந்துரையாடும் கோட்பாடுகளை அரசியலமைப்பின் அத்தியாயங்களும் ஏற்பாடுகளுமாக எவ்வாறு உள்ளடக்குவது என்ற விடயம் அடுத்த முக்கிய விடயமாகும். அதுபற்றிய கலந்துரையாடலும் இருக்க வேண்டும். இம்முறை மேற்கொள்ளப்படும் அரசியலமைப்புச் செயற்பாட்டில் தாராளமய சனநாயக ரீதியான கோட்பாடுகளின் எல்லைகளை வெற்றிகொண்டே ஆகவேண்டும் அதற்கான காரணம். இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பெயரைப் பற்றி மீண்டும் சிந்திப்பது எம்மிடமுள்ள அதற்கான ஆதாதரமாகும். இலங்கையை

விழிக்கும் மூன்று சொற்களை அநேகமானவர்கள் மறந்து போயுள்ளனர். சனநாயக சோசலிசக் குடியரசு. இலங்கையில் சனநாயகவாதிகள் இல்லை. சோசலிசவாதிகளும் இல்லை. குடியரசும் இல்லை. உண்மையில் இப்போது எமக்கு இப் போலியான சொற்களை உண்மையிலேயே அர்த்தமுள்ளதாக்குவதற்கான பொற்காலம் பிறந்துள்ளது. இலங்கையை உண்மையான சனநாயக நாடாக மாற்ற வேண்டும். சோசலிசம் என்பதற்கு வரலாற்று ரீதியான வாய்ப்பில்லை என்றாலும் சமூக சனநாயகக் கோட்பாடுகளை உள்ளடக்க முடியும். நாம் இதற்கான பாடங்களை இந்தியாவிலிருந்து கற்றுக் கொள்ள முடியும். குடியரசுவாதத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் எவை என்பதைப் பற்றிய விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். திருப்பியழைத்தல், பாராளுமன்றத்திற்கு இணையான சட்ட உருவாக்கத்திற்கான சட்ட உருவாக்கத்திற்குக் கருத்துத் தெரிவிப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளுக்கு எப்படி வாய்ப்பளிப்பது என்ற விடயம், அரசியல் அதிகாரம், சட்டசபை அதிகாரம் இருக்க வேண்டியது பாராளுமன்றத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு மட்டுமா, அல்லது மக்களால் அதாவது தொழிற்சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், விவசாய அமைப்புகள் போன்ற பொது மக்கள் அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளை சட்ட உருவாக்கச் செயற்பாட்டை எவ்வாறு தொடர்புபடுத்துவது என்பதைப் புதிதாகச் சிந்திக்க வேண்டும்.

இப்போது இலங்கையில் ஒற்றையாட்சி சட்டடவாக்க சபை காணப்படுகின்றது. அதாவது பிரதிநிதி உறுப்பினர் சபை மட்டும். இலங்கையில் முன்னர், பிரித்தானிய மரபில் வந்த இரண்டாம் நிலை உறுப்பினர் சபையொன்று இருந்தது. அது இரத்துச் செய்யப்பட்டது மாத்திரம்தான். மாற்றீடாக அதனை மீண்டும் ஆக்கபூர்வமாகக் கொண்டு வர முடியும். இப்போது மக்களிடம் மக்கள் பேரவை என்றதொரு கருத்துள்ளது. மக்கள் சபை அல்லது பொது மக்கள் சபை. இரண்டாம் நிலை உறுப்பினர் சபை பற்றிப் புதிதாக சிந்திக்க வேண்டும். அந்த மக்கள பேரவை (People Council) என்ற கருத்தையும் கையாண்டு கொண்டு, இலங்கையில் பாரிய தொழிற்சங்கங்கள் உள்ளன. விவசாய அபிவிருத்தி அமைப்புகள் உள்ளன. பெண்கள் ஒருங்கிணைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட சாதியினரின் அமைப்புகள் உள்ளன. (அவை பெரும்பாலும் அடி மட்டத்தில் காணப்படுகின்றன. இன்னமும் வெளித் தோன்றவில்லை.) சிறுபான்மை மக்கள் பிரிவுகளின் அமைப்புகள் உள்ளன. அவ்வாறான பிரதிநிதிகளை எவ்வாறு தனியாகத் தேர்ந்தெடுப்பது? தொழிற்சங்கங்களுக்கு அவர்களில் 10 பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்குமாறு சொல்லலாம். அவ்வாறானவர்கள் மக்களின் நேரடிப் பிரதிநிதிகள். அவர்களின் சபைகளில் தமது நேரடி வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். அவ்வாறு ஆக்கபூர்வமாகச் சிந்திக்க முடியும்.


அரசியலமைப்பு உருவாக்கம் என்ற விடயத்தில், தொழில்நுட்பப் பிரச்சனைகள் கட்டாயம் காணப்படும். தாராளமய பாராளுமன்ற சனநாயகத்தில் காணப்படுகின்ற எல்லைகளே தொழில்நுட்பப் பிரச்சனைகள் எழுவதற்கான முக்கிய காரணம். நாம் அவற்றை வெல்லலாம். தாராளமய சனநாயகக் கோட்பாடுகள் கைவிடப்பட வேண்டும் என்பது என்னுடைய முன்மொழிவின் அர்த்தமில்லை. அதிலுள்ள குறைபாடுகளையும் எல்லைகளையுமே வெற்றிகொள்ள வேண்டும். அங்கு நாம், நேரடி சனநாயக அடிப்படைக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தும் போது அடிப்படை உரிமைகள் பற்றிய கேள்விகளும் எழக் கூடும் என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயம். உதாரணமாக அடிப்படை உரிமைகள் தொடர்பில் எமது அத்தியாயமொன்று இருந்தால், அதன் எல்லைகளுக்கு மட்டுப்படுத்த வேண்டும். மக்கள் பேரவையில் எழுகின்ற ஆலோசனைகள் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் காப்பீடுகளுக்குள் நிர்ணயிக்கப்படுமாறு தயாரிக்கப்பட வேண்டும் என நாம் எடுத்துக் கொண்டால், அப்போது நாம் தாராளமய சனநாயகக் கோட்பாடுகள், சமூக சனநாயகக் கோட்பாடுகள், அவ்வாறே குடியரசுவாதக் கோட்பாடுகள் ஒன்றையொன்று அகற்றிவிடக் கூடிய ஒன்றுக்கொன்று எதிரான கோட்பாடுகள் என நினைத்துவிடக் கூடாது. அவற்றுக்கிடையிலும் ஒரு கருத்தாடலை உருவாக்க வேண்டும்.

அரசியலமைப்புச் சிந்தனையொன்று இல்லாமை இலங்கையில் காணப்படுகின்ற ஒரு சிக்கலாகும். எமது அரசியல்வாதிகளிடமும் இல்லை. சட்டத்தரணிகளிடமும் இல்லை. 1972 அரசியலமைப்புச் சட்டத்தை தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவோ சமசமாஜக் கட்சியோ இலங்கையில் குடியரசொன்று அவசியம் என கோட்பாட்டு ரீதியாக விளக்கவில்லை. அரசியலமைப்பு சபை அறிக்கைகளை பரிசீலித்துப் பார்த்தால் இது தெரியவரும். அது இலங்கைக்கு அரசியலமைப்பு கோட்பாடுகள்

அறிமுகப்படுத்தப்பட்டமை கோட்பாட்டு ரீதியாக விளக்கப்படவில்லை. 72 அரசியலமைப்பை எடுத்து நோக்குகின்ற போது அது இலங்கையின் அரசியலமைப்புச் சிந்தனையை மேம்படுத்த மிகச் சிறந்த சந்தர்ப்பம் என்பது தெரியும். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அதன் பின்னரும் அது நடக்கவில்லை. கடந்த காலத்தில் 19வது திருத்தம் வந்தது. 19வது திருத்தத்திற்கு அடிப்படையாக அமைந்த அரசியலமைப்பு கோட்பாடுகள் அதிலுள்ள அரசியற் கோட்பாட்டு சிந்தனை எதுவென்பதைக் காணவில்லை. அங்கு தொழில்நுட்ப ரீதியான விளக்கம் மட்டுமே உள்ளது. அரசியலமைப்புச் சட்டமூலமொன்றை எடுத்துக் கொண்டு உயர்நீதிமன்றத்திற்குப் போவதாக வைத்துக் கொள்வோம் அங்கு அடிப்படை தொழில்நுட்ப விடயங்கள் மட்டும் விவாதிக்கப்படும் தொழில்நுட்பச் சிக்கல்கள் அல்லாமல் கோட்பாட்டு விடயங்கள் பற்றி உயர்நீதிமன்றத்தில் வாதாடினால், கண்டிப்பாக நீதிபதி சட்டத்தரணிகளிடம் இவை எங்களுக்கு அவசியமற்றவை, நாம் தொழில்நுட்ப ரீதியான சட்டப் பிரச்சனைகளை மட்டுமே தீர்மானிப்போம் என்று சொல்வார். அதிலிருந்து இலங்கை அரசியலமைப்புச் சிந்தனையும் அது தொடர்பான நீதிமன்றப் பிரவேசத்தில் காணப்படுகின்ற வரையறைகள் எவ்வாறானவை என்பது தெரியும். அவற்றையும் வெற்றிகொள்ள வேண்டும். தொழில்நுட்ப விடயங்கள் அவை பற்றிய கோட்பாட்டு விளக்கமின்மையாலேயே சவாலாக அமைகின்றன என்பதுதான் என்னுடைய வாதம்.

# மக்கள் பங்கேற்புடனேயே அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்

**எரான் விக்கிரமரத்ன**
பாராளுமன்ற உறுப்பினர் - ஐக்கிய மக்கள் சக்தி



ஒரு நாட்டில், சமூகத்தில் அரசியலமைப்பொன்றை நாம் உருவாக்கப் போகின்றோம் என்றால், அதற்கு முன் எமது சமூகத்திலுள்ள மதிப்பீடுகள் எவை என்பது நாம் கேட்க வேண்டிய கேள்வியாக உள்ளது. நான் பிறப்பதற்கு இலங்கையைத் தேர்ந்தெடுக்கவில்லை. எனக்கு இது இலங்கை எனப் பின்னர் சொன்னார்கள். நான் சிங்கள இனத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை. பின்னர் நான் சிங்கள இனத்தவர் என்று சொன்னார்கள். நான் விக்கிரமரத்ன குடும்பத்தைத் தேர்ந்தெடுக்கவும் இல்லை. பின்னர் எனது பெயர் விக்கிரமரத்ன என்று சொன்னார்கள். நாம் தேர்ந்தெடுக்காத இந்த விடயங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டியதில்லை என நாம் பலருக்குச் சொல்கின்றோம். நாம் எடுக்கும் தீர்மானங்களுக்கே நாம் பொறுப்புக் கூற வேண்டும். எமது சமூகத்திலுள்ள மதிப்புகள் எவை? அனைவரும் சமமானவர்களாக இருக்க வேண்டும். அனைவரையும் நாம் மதிக்க வேண்டும். அவ்வாறே எமது சட்டக் கட்டமைப்பிற்குள் செயற்பட வேண்டுமா இல்லையா என்ற கேள்வியும் எம்மால் கேட்கப்பட வேண்டும். அதனால் தான் எமக்கு அரசியலமைப்பு அவசியமாகின்றது. அவ்வாறே நாம் சனநாயக ரீதியான வாழ்க்கை முறையொன்றைத் தேடுவதா, சனநாயக ரீதியாக வாழ்வதா? சில நாடுகளில் அப்படியான தெரிவொன்று இடம்பெறவில்லை. எம்மிடையே வறியவர்கள்

**இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில், 28 வருடங்களில் ஒரு புகழ்பெற்ற உத்தியோகத்தர் அல்லது அரசியல்வாதிக்கும் நீதிமன்றம் தண்டனை வழங்கியது இல்லை. அங்கே சுயாதீனத் தன்மை இல்லை. அதனை சுயாதீனப்படுத்த வேண்டும்.**

இருக்கின்றார்கள். சமூக நியாயமொன்று இருக்க வேண்டும். பிள்ளைகள் இருக்கின்றார்கள். மூத்தவர்கள் இருக்கின்றார்கள். எனவே இந்த மதிப்பீடுகளைத் தீர்மானித்துத்தான் அரசியலமைப்பு உருவாக்கத்திற்குச் செல்ல முடியும்.

அரசியலமைப்பை உருவாக்கும் போது நாம் சிந்திக்க வேண்டும். பெரும்பாலான நேரங்களில் நாம் பெரும்பான்மைவாதத்திற்குச் செல்கின்றோம். பெரும்பான்மைவாதம் மட்டும் போதாது. நாம் நீதிமன்றத்துக்குச் செல்லும் போது பெரும்பான்மைவாதத்திற்கு ஏற்ப நீதிமன்றம் தீர்ப்பு வழங்காது. நாம் இதில் கவனமாக இருக்க வேண்டும். புதிய அரசியல் கோட்பாட்டுக்கு ஏற்ப, சட்டவாக்க சபை, நிறைவேற்றதிகாரம், நீதிமன்றம் என்பன ஒன்றிலிருந்து ஒன்று பிரிய வேண்டும் என்பது எமக்குத் தெரியும். எமது இராசதானி முறைமை அப்படியானதல்ல. மன்னன் அனைத்தையும் தீர்மானிக்கின்றான், மன்னனே நீதிமன்றத் தீர்ப்புகளையும் எடுத்தான். இப்போது அப்படிச் செய்ய முடியாது.

**யார் கடத்தல்காரர்களை நியமித்தார்கள்? குற்றச்சாட்டொன்று இருக்கும் போது, கொலையாளி என நீதிமன்றமொன்றில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் போது, பெரும்பான்மை வாக்குகளால் நியமித்தது யார், அதற்கு 225 பேரும் பொறுப்புக் கூற வேண்டியதில்லை. அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் வாக்களித்தவர்கள். நாம் பிரஜைகள் என்ற வகையில் பொறுப்பேற்க வேண்டும். எப்போதும் எங்காவது சுட்டிக் காட்டிவிட்டு தப்பிவிட முடியாது.**

## 'சிஸ்டம் சேஞ்ச்' என்பது என்ன?

பெண்களும் இளைஞர்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்ற பெரும் கோரிக்கை நாட்டில் உள்ளது. ஆம் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும். அவர்களுடைய ஆற்றல்களும் கூட. என்றாலும் நாட்டில் சிக்கலொன்றுள்ளது. அதனால் தான் நாம் ஒதுக்கீடு ஒன்றை வழங்கியேனும் அவர்களைக் கொண்டு வர வேண்டும். போராட்டத்தில் சிஸ்டம் சேஞ் வேண்டும் என்று கோஷமிட்டனர். சிஸ்டம் சேஞ்ச் என்றால் என்ன என்பதை சுருக்கமாகச் சொன்னால், ஆள்பவர்கள் யாராக இருப்பினும், பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்புக் கூற வேண்டும். இதனைத் தான் பலர் கேள்வி கேட்கின்றனர். 19வது திருத்தத்தை நாம் கொண்டு வந்தோம். அதில் ஜனாதிபதியால் உயர் பதவிகள் முன்மொழியப்படலாம். பெயர் குறிக்கவும் முடியும். ஆனால் அதற்கிடையில் முன்மொழியப்படும் நபர்கள் தகைமையானவர்களா இல்லையா என்பதை சுயாதீனக் குழுவொன்று தீர்மானிக்கும். அதுவே சட்டவாக்க சபை எனப்படும். அதுதான் சுயாதீன ஆணைக்குழுக்கள் எனப்படும். பொலிசுக்கு, சுயாதீன ஆணைக்குழுவொன்று இருக்க வேண்டும், இலஞ்ச ஊழலுக்கு எதிரான சுயாதீன ஆணைக்குழுவொன்று இருக்க வேண்டும். 19வது அரசியலமைப்பின் ஊடாக முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய உத்தியோகத்தரொருவரைப் பிடித்து தண்டனையும் வழங்கினார்கள். ஆனால் இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில், 28 வருடங்களில் ஒரு புகழ்பெற்ற உத்தியோகத்தர் அல்லது அரசியல்வாதிக்கும் நீதிமன்றம் தண்டனை வழங்கியது இல்லை. அங்கே சுயாதீனத் தன்மை இல்லை. அதனை சுயாதீனப்படுத்த வேண்டும். அவ்வாறே எமது பெறுகைக் கோரல் நடவடிக்கைகள், மக்கள் சேவை, கணக்காய்வு ஆணைக்குழு, இவையனைத்தும் சுயாதீனமாக வேண்டும். அப்போதுதான் பொறுப்பை அதிகரிக்க முடியும். இதுதான் நாட்டின் கோரிக்கை.

அவ்வாறே அதிகாரத்தைப் பகிரவேண்டும் என்ற இன்னொரு கோரிக்கையும் உள்ளது. பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் மட்டும் எல்லாத் தீர்மானங்களையும் எடுக்கத் தேவையில்லை. நானும் அதனை ஏற்றுக் கொள்கின்றேன். அதிகாரம் பிரிந்து செல்ல வேண்டும். உதாரணமாக சுற்றுலாத் துறையை எடுத்துக் கொண்டால், மாத்தறை, திருகோணமலை, ஆகிய இவ்வனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியாக அல்ல. அந்தப் பகுதி மக்கள் அந்தத் தீர்மானங்களை எடுக்கட்டும். ஆனால் அரசுக்கு எமது வெளிநாட்டுக் கொள்கைகள் எவை? பாதுகாப்பு தொடர்பான கொள்கை எது? நிதி

தொடர்பான கொள்கை என்ன? என்ற விடயங்கள் தொடர்பில் பொறுப்புகள் உள்ளன. அவற்றை மத்திய அரசு தீர்மானிக்க வேண்டும். எனவே அரசியலமைப்பில் நாம் செய்ய வேண்டிய பல விடயங்கள் உள்ளன.

பொது மக்களும் பொறுப்பேற்க வேண்டும்.

இந்த போராட்டத்திலிருந்து, பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல தாமும் இதில் தொடர்புபட வேண்டும் என்ற கோரிக்கையொன்று வந்துள்ளது. அவர்களுடைய கருத்துகளையும் எடுக்க வேண்டும் என்கிறார்கள். இது சனநாயக ரீதியான கட்டமைப்பெனில், நாம் நியமிக்கின்றவர்களைப் பற்றிய நம்பிக்கை எமக்கிருக்க வேண்டும் என்கின்றார்கள். யார் கடத்தல்காரர்களை நியமித்தார்கள்? குற்றச்சாட்டொன்று இருக்கும் போது, கொலையாளி என நீதிமன்றமொன்றில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் போது, பெரும்பான்மை வாக்குகளால் நியமித்தது யார், அதற்கு 225 பேரும் பொறுப்புக் கூற வேண்டியதில்லை. அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் வாக்களித்தவர்கள். நாம் பிரசைகள் என்ற வகையில் பொறுப்பேற்க வேண்டும். எப்போதும் எங்காவது சுட்டிக் காட்டிவிட்டு தப்பிவிட முடியாது. நாம் சரியானவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த சனநாயக ரீதியான கட்டமைப்பில் அரசியற் கட்சிகள் தகைமையானவர்களை ஈடுபடுத்துவது இல்லை என்ற உண்மையை நாம் அறிவோம். அந்த முறையை

**21வது திருத்தத்தை சமர்ப்பிக்கும் போது எமது கட்சி ஒரு விடயத்தைச் சொன்னது. அதாவது மக்கள் சபையொன்று இருக்க வேண்டும் என்றது. அனைவரும் அரசியலுக்கு வருவதில்லை. எனினும் இளைஞர்கள், பெண்கள், கல்விமான்கள், தொழில் வல்லுனர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கிய சபையொன்று காணப்பட வேண்டும். அவர்கள் ஆலோசனை வழங்க முடியும்.**

மாற்ற வேண்டும் இதில் தகைமையானவர்களை ஈடுபடுத்துமாறு நாம் அழுத்தம் கொடுக்க வேண்டும். இங்கு தகைமையானவர்களை இடுவதற்கு அதற்கான தகைமைகள் இருக்க வேண்டும் என வலியுறுத்த வேண்டும். அவை நெறிமுறை சார்ந்த தகைமைகளாக இருக்கலாம், அல்லது கல்வித் தகைமைகளாக இருக்கலாம், திறமைகள் தொடர்பானதாக இருக்கலாம். அவ்வாறானவர்களை ஈடுபடுத்துமாறு வலியுறுத்த வேண்டும். அல்லது நாம் உள்ளக சனநாயகமுள்ள கட்சிகளை உருவாக்கி அவ்வாறான கட்சிகள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். அதற்கான பொறுப்பும் மக்களுக்கு உள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் விதிமுறையொன்றும் உள்ளது. இலங்கையில் பெரும்பாலும் குடும்ப அரசியல்தானே நடக்கின்றது. தந்தையின் பின்னர் மனைவி வருவார். அல்லது மகனோ மகளோ வருவார்கள். குடும்பத்தில் ஒருவர் வருவார். அதனையும் மாற்றியமைக்க வேண்டும். அவர்களுக்கு தகைமைகள் இருக்குமானால் பரவாயில்லை. தகைமைகள் இல்லாதிருப்பது தான் பிரச்சனை. அப்போதுதான் சிக்கல்கள் எழுகின்றன. அரசியலமைப்பு உருவாக்கமானது குழுவொன்றை அமைத்து மூன்று நான்கு பேரால் தீர்மானிக்கப்பட முடியாதது. மக்கள் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும். அது தவிர பாராளுமன்றத்தை Constitution Esambly (அரசியலமைப்புச் சபை) ஒன்றாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றப்பட்டு அதனூடாகத் தான் புதிய அரசியலமைப்பொன்று வர வேண்டும்.

21வது திருத்தத்தை சமர்ப்பிக்கும் போது எமது கட்சி ஒரு விடயத்தைச் சொன்னது. அதாவது மக்கள் சபையொன்று இருக்க வேண்டும் என்றது. அனைவரும் அரசியலுக்கு வருவதில்லை. எனினும் இளைஞர்கள், பெண்கள், கல்விமான்கள், தொழில் வல்லுனர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கிய சபையொன்று காணப்பட வேண்டும். அவர்கள் ஆலோசனை வழங்க முடியும். அந்த சபை எவ்வாறு உருவாக வேண்டும் என்பதிலும் ஒரு பிரச்சனை உள்ளது. நாம் அதைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கும் ஆட்சி முறைக்குள் வந்து, அவர்களின் கருத்துக்களை வெளியிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும். நாம் சனநாயகத்தை வலுப்படுத்தும் முறையொன்றுக்குச் செல்ல வேண்டும்.

# தேர்தல் முறையிலும் மாற்றம் தேவை

**தயாசிறி ஜயசேக்கர**
பாராளுமன்ற உறுப்பினர் - ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



நாட்டில், இன்று காணப்படும் சூழ்நிலை உண்மையில் முதலாவது விடயம் பாராளுமன்றத்தின் 225 பேரும் அவசியமற்றவர்கள் என்ற விடயம். இது இலங்கையில் இருக்கின்ற அனைவரும் சொல்லும் விடயம் அல்ல போராட்ட பூமியிலியிருக்கும் ஒரு சில குழுவினர்களால் தோற்றுவிக்கப்பட்ட விடயம் என்பதே அங்குள்ள பிரதான நெருக்கடியாகும். இவ்வாறுதான் 2019லும் 225 வேண்டாம். பாராளுமன்றத்திற்கு குண்டு வீச வேண்டும் எனச் சொல்லிக் கொண்டுவந்த 225ம் தான் இப்போது மீண்டும் வேண்டாம் என்ற நிலைமைக்கு வந்துள்ளது.

உண்மையில் இங்கிருப்பது இலக்கத்திலுள்ள பிரச்சனையல்ல. தாம் நியமிக்கின்ற பிரதிநிதி பற்றிய நம்பிக்கை, கௌரவம், அவர் உண்மையில் போய் என்ன செய்வார், பாராளுமன்றத்தில் செயற்படுகின்ற செயல்முறை, போன்றவை பற்றிய பிரச்சனையாகத் தான் நான் அதனைக் காண்கின்றேன். இரண்டாவது விடயம், 74 வருடங்களாக அரசியல் வேண்டாம் என்கின்ற விடயம். 74 வருடங்களில் அல்ல இந்த பிரச்சனை எழுந்தது. 77க்கு முன்னர் இருந்த அரசாங்கங்களில் ஊழல் தன்மை குறைவாக இருந்தது. நபர்கள் தீயவர்கள் அல்ல. எமக்குத் தெரியும் சீ.டபிள்யு.டபிள்யு. கன்னங்கர அவர்கள் உயிரிழக்கும் போது அவர் கருணைத் தொகையையே பெற்றுக் கொண்டார். அவ்வாறான அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு சமூகம்தான் 77ன் பின்னர், விகிதாசார தேர்தல் முறையும் திறந்த பொருளாதார முறையும் காரணமாக பாரிய நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. அதனால் இது 40 வருடங்களுக்கு முந்திய அரசியலுடன் ஏற்பட்ட நிலைமை என்றே நான் நம்புகின்றேன்.

## தேசிய சபை தொடர்பான பிரேரணை

அவ்வாறே, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையுடன் இணைந்து தொழில்வாண்மையாளர்களைக் கொண்ட தேசிய சபையொன்றைத் தாபித்து, அவர்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு அரசாட்சி செய்ய வேண்டும் என்ற விடயம், இந்த போராட்ட பூமியில் இருந்தவர்களிடமிருந்து வந்த பாரிய முன்மொழிவாகவே இருந்தது. அதைத் தான் நாமும் பிரேரித்துள்ளோம். அவர்கள் பாராளுமன்றத்திற்கு

எங்களை நியமித்து அனுப்புவதைப் போன்றே மறுபுறத்தில், பாராளுமன்றத்திற்கு நியமித்து அனுப்புவர்களிடையிலேயே மேலும் ஒரு குழுவினரை அரசியலுக்கு எடுத்துக் கொள்ள, அவர்களின் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ள, கருத்துக்கள் ஆலோசனைகளை கருத்திற் கொள்ளுகின்ற ஒரு சபை இருக்க வேண்டும் என்ற விடயம். ஒரு வகையான பெறுமதியுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்ற விடயமாக நாம் இதனைக் காண்கின்றோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற ரீதியில் எமது ஏற்பாட்டாளர்களை தலைவர் நியமிப்பதில்லை. தலைவர் கடிதத்தைக் கொடுத்தாலும் அதற்கு முன்னர் சில நிகழ்வுகள் உள்ளன. ஏனென்றால் நேர்முகத் தேர்வு விசாரணைச் சபையொன்று உள்ளது. அச் சபைக்கு நபர்கள் வருவார்கள். அவர்களின் தகவல்கள் கலந்துரையாடப்படும். அதிலிருந்துதான் நாம் அந்தந்தத் தொகுதிகளுக்கு ஏற்பாட்டாளர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்போம். கட்சித் தலைவர் ஒருவரால் நபரொருவர் நியமிக்கப்படுவது நியாயமான முறையல்ல. தேர்தலொன்றின் போது தாம் விரும்பிய நபருக்கு வாக்களிக்க சிறந்த பட்டியலொன்று இல்லையென்பது மக்களிடமிருந்து விடுக்கப்படும் பாரிய குற்றச்சாட்டு. சில மாவட்டங்களில் பட்டியலை எடுத்துக் கொண்டால், திருடர்கள், கொள்ளைக்காரர்கள், சமூக ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்கள், காடையர்கள், அயோக்கியர்கள், கல்வியறிவற்றவர்கள் என இவ்வாறான பல எண்ணிக்கையிலான பெயர்கள்

**அவ்வாறே, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையுடன் இணைந்து தொழில்வாண்மையாளர்களைக் கொண்ட தேசிய சபையொன்றைத் தாபித்து, அவர்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு அரசாட்சி செய்ய வேண்டும் என்ற விடயம், இந்த போராட்ட பூமியில் இருந்தவர்களிடமிருந்து வந்த பாரிய முன்மொழிவாகவே இருந்தது. அதைத் தான் நாமும் பிரேரித்துள்ளோம்.**

இந்தப் பட்டியலில் காணப்படுகின்றன. அதுதான் காணப்படுகின்ற பிரதான நெருக்கடி. மக்களால் தேர்ந்தெடுக்கக் கூடிய மனிதர்கள் இந்த பட்டடியலில் இல்லை.

## ஏற்றுக் கொள்ளக் கூடிய வேட்பாளர்கள் தேவை

அரசியற் கட்சி என்ற ரீதியில் எம் அனைவருக்கும் நாட்டிலும் சமூகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட நபர்களை ஈடுபடுத்தும் பொறுப்புள்ளது. ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு உள்ளானவர்கள், கொலை செய்தவர்கள், கொலைக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை பட்டியலின் மூலம் சமர்ப்பிக்கும் போது தேர்ந்தெடுக்கின்ற ஆற்றல் மக்களுக்குக் கிடைக்காது. அது தொடர்பான பல விடயங்களை நாம் கலந்துரையாடி வருகின்றோம்.

அரசியலமைப்புத் திருத்தம் என்ற விடயத்தில், இங்கு சொல்லப்பட்ட விடயங்களுடன் இணைந்து இப்போது காணப்படும் தேர்தல் முறையும் சீர்திருத்தப்பட வேண்டும். அது பற்றியும் நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம். எமது பல பிரேரணைகளை சமர்ப்பித்துள்ளோம். எதிர்காலத்தில் மிக விரைவாக இந்த தேர்தல் திருத்தச் செயற்பாடுகளை வலுப்படுத்தினால் மட்டுமே பிரதிநிதித்துவ சனநாயகம் வலுப்பெறும். போராட்டத்துடன் தொடர்புபட்டுள்ள மனிதர்களின் உணர்வுகளை ஓரளவுக்கு இந்த செயற்பாட்டில்தான் ஆசுவாசப்படுத்த நேரிடும் என நான் நம்புகின்றேன்.

# கட்சிகளின் உள்ளக சனநாயகமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

**கலாநிதி ஹரிணி அமரசூரிய**
பாராளுமன்ற உறுப்பினர் - தேசிய மக்கள் சக்தி



இத்தருணத்தில் தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் இந்த பிரசைகளின் எழுச்சியை, அரசியல் விழிப்புணர்வுடன் எமது நாட்டுக்குத் தேவையான அரசியல் மாற்றம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்ற தருணமாகவே பார்க்கின்றோம். குறிப்பாக சனநாயக கட்டமைப்புக்குள், மக்கள் பிரதிநிதிகளுக்கும் பிரசைகளுக்குமிடையே காணப்படும் தொடர்பு பற்றிய புதிய வரைவிலக்கணம் அவசியப்படுகின்றதும் அது பற்றிய கலந்துரையாடல் தோன்றியுள்ளதுமான தருணம். சுருக்கமாகச் சொன்னால், ஆட்சியாளர்களுக்கும் பிரசைகளுக்குமிடையில், புதிய சமூக உடன்படிக்கையொன்று கோரப்படும் நேரம். தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் இன்று காணப்படும் அரசியலமைப்பின் மூலம் வரக்கூடிய அதிகபட்ச தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். இதனைத் தொடர்ந்தும் சீர்திருத்துவதன் மூலம் எமது நாட்டின் சனநாயகத்தை விரிவாக்கவோ வலுப்படுத்தவோ முடியாது என்பது பலகாலமாக நாம் பேசுகின்ற விடயம். சனநாயகம் சார்பில் இவ்வரசியலமைப்பு பற்றிய பல விமர்சனங்கள் உள்ளன. எனவே நாம் புதிய அரசியலமைப்பொன்றைத் தான் பிரேரிக்கின்றோம். நாம் 2018லிருந்தே அடிப்படை ரீதியான சில பிரச்சனைகளைப் பேசுவதற்காக புதிய அரசியலமைப்பொன்றுக்கான ஆலோசனையை விடுத்தோம்.

**தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் நாம் இன்று காணப்படும் அரசியலமைப்பின் மூலம் வரக்கூடிய அதிகபட்ச தூரத்தைக் கடந்து வந்துள்ளோம். இதனைத் தொடர்ந்தும் சீர்திருத்துவதன் மூலம் எமது நாட்டின் சனநாயகத்தை விரிவாக்கவோ வலுப்படுத்தவோ முடியாது என்பது பலகாலமாக நாம் பேசுகின்ற விடயம்.**

## சமத்துவத்தை சான்றுப்படுத்தல்

போராட்டம் நடத்தியதும், சிரமப்பட்டதும், ஆயுதப் போராட்டம் போன்றவற்றை மேற்கொண்டதும் ஆட்சியாளருக்கும் பிரசைக்கும் இடையிலான இந்த சமூக இணக்கப்பாட்டைச் சரிசெய்து கொள்வதற்காகத்தான் என இலங்கைப் பிரசைகள் என்ற வகையில் எமது மக்கள் நினைக்கின்றார்கள் என்பது ஒரு விடயம். பல வருடங்களுக்குப் பின்னரும் கூட அது சரியாக இடம்பெறவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள நேரிடுகின்றது. அதனைக் கட்டியெழுப்புவதுதான் எமது அடிப்படை நோக்கம். சமத்துவத்தையும் சமமான சமூக நியாயத்தையும் உறுதிப்படுத்துவது அடுத்த நோக்கமாகும். அரசியலமைப்பொன்றில் அது மிக முக்கியமான ஒன்று. அங்கு பிரசைகளின் பல்வேறு வகையான அடையாளங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு பக்கச்சார்புகளை மேற்கொள்ள முடியாதவாறு, உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மனித உரிமைகள் அத்தியாயத்திலும் தனிநபர் அடையாளம் மட்டுமன்றி குழுக்களின் அடையாளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். பால்நிலை, பாலியல், மத, கலாசார அடையாளங்கள் போன்றவை பாதுகாக்கப்படும் வகையிலான அரசியலமைப்பொன்று அவசியம். ஏனெனில் எமது சமூகத்தில் பன்மைத்துவம் காணப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பன்மைத்துவத்தில் இரண்டாம் தர (second class citizens) பிரசைகள் இருக்க வாய்ப்பில்லை. சமத்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## பிரசைகளின் அதிகாரத்தை அதிகரித்தல்

சனநாயகத்தை வலுப்படுத்த வேண்டுமாயின் பிரசைகளின் அதிகாரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது அடுத்த விடயம். இறையாண்மை பிரசையிடம்தான் உள்ளது. என்றாலும் எம்மால் இப்போதிருக்கின்ற முறைக்கு ஏற்ப, இறையாண்மை அதிகாரத்தை காட்டவோ அதனைச் செயற்படுத்தவோ தேர்தலொன்றின் போது மட்டுந்தான் முடிகிறது. அது போதுமானது அல்ல என நாம் நினைக்கின்றோம். சனநாயகத்தை வலுப்பெறச் செய்வதாயின், விரிவாக்குவதாயின், பிரசையொருவர் ஆட்சிச் செயற்பாட்டில் இதைவிட வலிமையோடு, தொடர்ச்சியாகச் செயற்படுவது எப்படியென்பதைப் பற்றியும் கவனத்திற் கொள்ள வேண்டும். அதனூடாக எம்மிடம் சில பிரேரணைகள் உள்ளன. இவை இறுதிப் பிரேரணைகளோ இறுதித் தீர்மானங்களோ அல்ல. இவற்றை நாம் கலந்துரையாடி வருகின்றோம். நான் ஒரிரு உதாரணங்களைக் குறிப்பிடுகின்றேன்.

தேர்தலொன்றின் போது அதிகாரத்திற்கு வரும்போது செய்யப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் அரசியற் கட்சிகள், அவர்களின் தேர்தல் பிரகடனங்களை முன்வைக்கின்றன, வாக்குறுதிகளை முன்வைக்கின்றன. அவற்றுக்கு ஏதேனுமொரு செல்லுபடித் தன்மை இருக்க வேண்டும் என நாம் நினைக்கின்றோம். அத்தேர்தல் பிரகடனங்களுக்கு ஏற்ப நியமிக்கப்படுகின்ற அரசாங்கம் அவற்றைச் செயற்படுத்துவதில் கடப்பாடுடையதாக இருத்தல் வேண்டும். அந்த விடயம் அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். வழங்கப்பட்ட அவ்வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை, தமது மனித உரிமையொன்று மீறப்பட்டுள்ளது என யாரேனும் ஒரு நபர் நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய ஆற்றல் இருக்க வேண்டும். அப்போது அரசியற் கட்சிகள் தாம் முன்வைத்த தேர்தற் பிரகடனங்கள், வாக்குறுதிகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் கடப்பாடுடையவையாக இருக்கும். அப்போது தேர்தற் பிரகடனங்கள் எச்சரிக்கையுடன் சமர்ப்பிக்கப்படும் என நாம் நினைக்கின்றோம். முடியாத விடயங்களைச் செய்வதாக வாக்குறுதி வழங்காதிருப்பதைப் போன்றே பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றவும் தயாராக மாட்டா. ஏனென்றால தமது உரிமையொன்று மீறப்படுகின்றது என பிரசையொருவர் வழக்குத் தொடர அரசியலமைப்பு ரீதியாக வாய்ப்பு உள்ளது.

**பால்நிலை, பாலியல், மத, கலாசார அடையாளங்கள் போன்றவை பாதுகாக்கப்படும் வகையிலான அரசியலமைப்பொன்று அவசியம். ஏனெனில் எமது சமூகத்தில் பன்மைத்துவம் காணப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்பன்மைத்துவத்தில் இரண்டாம் தர பிரசைகள் இருக்க வாய்ப்பில்லை.**

## திருப்பியழைக்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்

நாங்கள் சிந்திக்கின்ற இன்னுமொரு விடயம் Right to Recall. திருப்பியழைக்கும் அதிகாரம். அதாவது தேர்தலொன்றில் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதியின் நடத்தை பற்றிய விமர்சனங்கள் அவரை நியமித்த பிரசைகளிடம் இருக்குமாயின், அவர்கள் ஊழலில் ஈடுபடுவார்களாயின், ஏற்றுக் கொள்ள முடியாதவாறு நடந்துகொள்வார்களாயின், மனுவொன்றின் மூலம் அல்லது தேர்தலின் ஊடாக பிரசைகளுக்கு அவர்களைத் திருப்பியழைக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். 05 வருடங்கள் பூர்த்தியாகும் வரை காத்திருக்கத் தேவையில்லை. அந்த மக்கள் பிரதிநிதிகளை நியமித்த பிரசைகளால் அவர்களைத் திருப்பியழைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். 05 வருடங்கள் எதை வேண்டுமானாலும், செய்ய முடியும் என்ற எண்ணத்தில்தானே இன்று மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றார்கள். அவர்கள் வாக்குறுதியளித்த விடயங்களைச் செயற்படுத்துவதில்லை. இன்னொரு புறம் மக்கள் கருத்தும் மாறியிருக்கின்றது. ஆனால் பிரசைகளால் எதுவும் செய்ய முடியாது. 05 வருடங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறான நிலைமைகளைத் தவிர்க்கவும் இடைநடுவில் செய்யக் கூடிய விடயங்கள் பற்றி நாம் அவதானம் செலுத்த வேண்டும்.

கட்சிகளிலிருந்து அங்குமிங்கும் தாவுவதை நிறுத்த வேண்டும். அதன்மூலம் மக்களால் வழங்கப்பட்ட ஆணை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. ஏதேனுமொரு காரணத்திற்காக நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால் நியமித்தவுடன் அவர்களுக்குத் தேவையான பக்கம் சாய்ந்து விடுகின்றார்கள். இவை சனநாயகத்திற்கு எதிரானவை. இவற்றை அரசியலமைப்பு ரீதியாக நிறுத்த வேண்டும்.

இவ்வாறான சில பிரேரணைகள் எம்மிடம் உள்ளன. அவ்வாறே அரசியலமைப்பு ரீதியாகவும், கட்சி அரசியலுக்குள்ளும் இடம்பெற வேண்டிய இன்னொரு விடயம் உள்ளது. நாம் இந்த நேரத்தில் தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் 'வட்டார சபைகளை' அமைத்து வருகின்றோம். அவ்வட்டார சபைகளால் கட்சியின் மேல்மட்டத்திற்கே அழுத்தம் செலுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அக்கட்டமைப்பை ஆட்சி முறையுடன் தொடர்புபடுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக தேர்தலொன்றின் போது கட்சியின் வேட்பாளர்களை அவ்வட்டார சபைகள் முன்மொழியக் கூடியதாக இருக்க வேண்டும். அவ்வட்டார சபைகளின் ஊடாக தமது வேட்புமனு முன்னெடுக்கப்பட வேண்டுமேயன்றி மேலிருந்து இடுகின்ற ஒன்றாக இருக்க முடியாது. இதனூடாக கட்சி சனநாயகத்தை வலுப்படுத்தவும், பிரசைகள் ஏதேனும் செயற்பாட்டில் உறுதியாகப் பங்கேற்பதற்குமான வாய்ப்பு அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**நாங்கள் சிந்திக்கின்ற இன்னுமொரு விடயம் Right to Recall. திருப்பியழைக்கும் அதிகாரம். அதாவது தேர்தலொன்றில் நியமிக்கப்படும் மக்கள் பிரதிநிதியின் நடத்தை பற்றிய விமர்சனங்கள் அவரை நியமித்த பிரசைகளிடம் இருக்குமாயின், அவர்கள் ஊழலில் ஈடுபடுவார்களாயின், ஏற்றுக் கொள்ள முடியாதவாறு நடந்துகொள்வார்களாயின், மனுவொன்றின் மூலம் அல்லது தேர்தலின் ஊடாக பிரசைகளுக்கு அவர்களைத் திருப்பியழைக்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.**

அவ்வாறே இதனையும் சொல்ல வேண்டும். அரசியலமைப்பினால் அனைத்தையும் செய்துவிட முடியாது. அரசியலமைப்பு என்பது ஒரு விடயம். பிரசைகள் பற்கேற்பு இடம்பெறுவதாயின் பிரசைகள் ஒருங்கிணைக்கப்படுவதும், அரசியல் அறிவைப் பெற்றுக் கொள்வதும் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும்.

# போராட்டத்தில் கட்டுண்டு அரசியலமைப்புகளைத் தயாரிப்பது நாட்டில் இடி விழுவதற்கு ஒப்பாகும்

**பிரசன்ன ரணதுங்க**
பாராளுமன்ற உறுப்பினர் - ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



எமது நாட்டில் அரசியலமைப்பானது 78லிருந்து இதுவரை 20 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. இத் திருத்தங்களில் பல, அரசியற் கட்சிகளின் அல்லது நபர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே கொண்டுவரப்பட்டன. அதனாற்தான் திருத்தங்கள் வந்து வந்து இது சிக்கல் நிலைமைக்கு வந்துள்ளது. எனவே நிகழ்காலத்திற்குப் பொருந்துகின்ற புதிய அரசியலமைப்பொன்றை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கருத்து நாட்டு மக்களிடமும் கல்விமான்களிடமும் காணப்படுகின்றது. மக்களின் தேவைகளை இனங்கண்டு நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் எனது ஆலோசனையும் கூட.

ஜனாதிபதி முறையை இரத்துச் செய்கின்ற போது மாகாண சபைகளுக்கு என்ன நடக்கும், உள்ளு

**ஜனாதிபதி முறையை இரத்துச் செய்கின்ற போது மாகாண சபைகளுக்கு என்ன நடக்கும், உள்ளூராட்சி யாரின் கீழ் நிருவகிக்கப்படும், என்ற சிக்கல் தோன்றும். இவை ஒன்றோடொன்று இணைந்துள்ள விடயங்கள். எமது நாட்டை கூட்டாட்சி ஆக்குவதா, ஒற்றையாட்சி நாடாக்குவதா? என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். கூட்டாட்சியாக்குவதாயின் மாகாண சபைகளை வைத்துவிட்டு, ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்தால் கூட்டாட்சியாகக் கொண்டு செல்லலாம்.**

ராட்சி யாரின் கீழ் நிருவகிக்கப்படும், என்ற சிக்கல் தோன்றும். இவை ஒன்றோடொன்று இணைந்துள்ள விடயங்கள். எமது நாட்டை கூட்டாட்சி ஆக்குவதா, ஒற்றையாட்சி நாடாக்குவதா? என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். கூட்டாட்சியாக்குவதாயின் மாகாண சபைகளை வைத்துவிட்டு, ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்தால் கூட்டாட்சியாகக் கொண்டு செல்லலாம். நாட்டின் பெரும்பான்மை மக்கள் இது ஒற்றையாட்சி அரசாங்கமாக இருக்க வேண்டும் எனச் சொல்வார்களாயின், மாகாண சபைகளைக் கையாள்வதற்கான சில அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும். இதனைச் சுருக்கமாக விளக்க முடியாது. இது விரிவான கலந்துரையாடல். நான் எதிர்க்கட்சியில் இருக்கும்போது அரசியலமைப்புத் திருத்தக் குழுவில் நான்கு வருடங்கள் இருந்தேன். நாம் கலந்துரையாடினோம். முடிவொன்றைக் காணவில்லை.


**போராட்டக்காரர்கள் 225 பேரும் வேண்டாம் என்று சொல்கின்றார்கள். ஆனால் இப்போதிருக்கின்ற 225 பேரும் விலகினால் அடுத்து பட்டியலில் உள்ள 225 பேர்தான் நியமிக்கப்படப் போகின்றார்கள். அதனால் நிறைவேற வேண்டியது போராட்டக்காரர்களின் நோக்கமல்ல.**

அரசியலமைப்பு எனப்படுவது ஓரிரு நாட்களில் தயாரிக்கக் கூடிய விடயமல்ல. நாட்டில் ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் பலருக்கு இந்த அரசியலமைப்பு பற்றிய புரிதல் இல்லை. அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு வாழ்வதே அவர்களது தேவை. எனவே, இந்த நாட்டில் ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி இது தொடர்பான வாதவிவாதங்கள் ஏற்பட இடமளித்து இந்த நாட்டுக்குப் பொருத்தமான அரசியலமைப்புச் சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என நம்புகின்றேன். அதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும். இல்லாவிடில் இதனைச் செய்ய முடியாது.

இன்று பாராளுமன்றத்தில் தேசிய பட்டியலிலிருந்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அனைவரும் மக்கள் வாக்குகளால், மக்களின் பிரதிநிதிகளாகத்தான் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று போராட்டத்தைப் பற்றி இந்த நாட்டில் பெரிதாகப் பேசுகின்றார்கள். போராட்டக்காரர்கள் 225 பேரும் வேண்டாம் என்று சொல்கின்றார்கள். ஆனால் இப்போதிருக்கின்ற 225 பேரும் விலகினால் அடுத்து பட்டியலில் உள்ள 225 பேர்தான் நியமிக்கப்படப் போகின்றார்கள். அதனால் நிறைவேற வேண்டியது போராட்டக்காரர்களின் நோக்கமல்ல. அங்கிருக்கின்ற அறுபது தலைவர்களிடம் இடம்பெற வேண்டியது எதுவெனக் கேட்டால், அந்த அறுபது பேரும் அறுபது விடயங்களைச் சொல்வார்கள். அரசியலமைப்பைப் பற்றிய புரிதல் இல்லாதவர்களும் அங்கு பேசுகின்றார்கள். அவர்கள் எதனை முன்மொழிகின்றார்கள் என ஊடகங்கள் கேட்கும் போது அவ்வாறான பிரேரணைகள் அங்கேயில்லை என்கின்றார்கள். எனவே இந்தப் போராட்டத்தில் சிக்குண்டு, அரசியலமைப்புகளை தயாரிக்க முனைந்தால் அது நாட்டில் இடி விழுந்ததற்கு ஒப்பாகும். இது பற்றிய சிறந்த புரிதலையுடைய குழுக்களை ஒன்றிணைத்துக்கொண்டு நல்லதொரு கலந்துரையாடலை ஏற்படுத்தி, அதனை மக்களுடைய தரப்பிலிருந்து பார்த்து மக்களின் குறிக்கோள்கள் பாதுகாக்கப்படும் வகையில் செயற்படுகின்ற அரசியலமைப்பொன்றாக அது இருக்க வேண்டும்.

# பழைய முறையை ஓரங்கட்டி புதிதாக சிந்திக்க வேண்டும்

**எம்.ஏ. சுமந்திரன்**
பாராளுமன்ற உறுப்பினர் - இலங்கை தமிழ் அரசு கட்சி



போராட்டக்காரர்கள் மிகவும் அழுத்தமாக சொல்கின்றார்கள் தற்போதைய ஒட்டுமொத்த ஆட்சிமுறையில் மாற்றம் இடம்பெற வேண்டுமென்று. அவர்கள் சொல்லும் ஒருசில விடயங்கள் உண்மை என்பதை நாங்களும் உணர்கின்றோம். தற்போதைய பிரதிநிதித்துவ ஜனநாயக முறை மக்கள் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுகின்றதா? அல்லது குறிப்பிட்ட பிரதிநிதிகளின் அபிலாசைகள் அல்லது மாற்றுக் கருத்தா என்ற நியாயமான சந்தேகம் நம் அனைவருக்குமே உண்டு.

இந்த முறையை முழுமையாக மாற்றுவதாயின் எமக்கு புதிய அரசியலமைப்பு ஒன்று அவசியம். அதனூடாக நடைமுறையிலுள்ள பிரதிநிகளை தெரிவு செய்யும் முறையை மாற்றலாம். தற்போது அரசியல் கட்சிகள் பிரதிநிதிகளை தெரிவு செய்து மக்கள் முன்னிறுத்தும் செயன்முறை இடம்பெறுகின்றது. மாறாக பழைய தேர்தல் முறையானது, மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு தமது பிரதிநிதிகளை முன்நிறுத்தினர்.

நடைமுறை செயன்முறையில் ஐந்து வருடங்களுக்கு அதிகாரமளித்து பிரதிநிகளை தெரிவுசெய்து அனுப்பியதன் பின் குறிப்பிட்ட பிரதிநிகள் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு

**நடைமுறை செயன்முறையில் ஐந்து வருடங்களுக்கு அதிகாரமளித்து பிரதிநிகளை தெரிவுசெய்து அனுப்பியதன் பின் குறிப்பிட்ட பிரதிநிகள் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு தலையீடு செய்வதற்கும், அழுத்தம் தெரிவிப்பதற்கான ஆற்றல், அதிகாரம் இவர்களை நியமித்த மக்களுக்கு இருப்பதில்லை.**

தலையீடு செய்வதற்கும், அழுத்தம் தெரிவிப்பதற்கான ஆற்றல், அதிகாரம் இவர்களை நியமித்த மக்களுக்கு இருப்பதில்லை.

உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்வாறான முறையே இடம்பெறுகின்றது. வாக்கெடுப்பில் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அந்த சபை ஒன்றுகூடி ஆட்சியமைப்பது எவ்வாறென்பதை தீர்மானிக்கின்றது. தற்போதைய முறைக்கமைய அதிக வாக்குகளை அல்லது அதிக தொகுதிகளை வென்ற கட்சியே ஆட்சியமைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது.

இம்முறை மாற வேண்டுமென்றால் மக்கள் தமது பிரதிநிதியை தெரிவு செய்து முன்நிறுத்தி, குறிப்பிட்ட பிரதிநிதி வாக்கெடுப்பால் தெரிவு செய்யப்பட்ட பின்னர் குறிப்பிட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சியை அல்லது குழுமுறை (கொமிடி) ஒன்றை உருவாக்க வேண்டும். தற்போது இம்முறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

## பொதுமக்கள் சபை என்றால் என்ன?

பொதுமக்கள் சபை என்பது தொடர்பிலும் இந்நாட்களில் சில கலந்துரையாடல் இடம் பெற்றுவருகின்றன. பொதுமக்கள் சபை என்பது குறித்து பின்வருமாறு விளக்கலாம். அதன்போது வெவ்வேறு மட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அடுத்த கட்டங்களுக்கு நகர்ந்து, அவ்வாறான பிரதிநிதிகள் ஒன்றுகூடி பாராளுமன்றமொன்றாக அல்லது பொதுமக்கள் சபையாக ஒன்றுகூடி பொறுப்புக்கள் ஏற்று ஆட்சி முன்னெடுத்தல் எனலாம்.

இம்முறைகளை மேற்கொள்ள வேண்டுமெனின் அரசியலமைப்பை முழுமையாக மாற்றியமைத்து, நடைமுறைச் செயன்முறையை ஒருபுறம் வைத்து, புதிதாக சிந்திக்க வேண்டும். அத்துடன் பொதுமக்கள் சபையென்பது நாட்டுக்குரிய முக்கிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட தீர்மானங்கள் பொதுமக்கள் சபைகளுக்கு அனுப்பியதன் பின் இறுதியாக பிரதான சபைக்கு அனுப்ப வேண்டும்.

இந்த முறையை நடைமுறைப்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் காணப்பட்டாலும் தற்போது எமது நாட்டிற்கு அவ்வாறான முறையொன்று அவசியமென்ற நிலைக்கு நாடு முகம்கொடுத்துள்ளது. ஏனெனில் தற்போது நடைமுறையினுள் ஐந்து வருடத்திற்கு அதிகாரங்களை வழங்கி பிரதிநிதிகளை தெரிவுசெய்து அனுப்பியதன் பின்னர் குறித்த பிரதிநிகள் மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு எதிராக தலையீடு செய்வதற்கான அல்லது அழுத்தம் செலுத்துவதற்கான ஆற்றல் அப்பிரதிநிதிகளை நியமிக்கும் பொதுமக்களுக்கு இருப்பதில்லை.

எமது நாடு முகம் கொடுத்துள்ள தற்போதைய நிலைக்கு இம்முறையும் முக்கிய காரணம் என்பதை அதானிக்க முடிகின்றது. ஆகவே முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தலையீடு செய்வது பொதுமக்கள் சபையின் முக்கிய பணியாகும்.

மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போது அதுகுறித்து ஆராய்ந்து, குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதியை நீக்கி, வேறொருவரை நியமிப்பதற்கான அதிகாரம் மக்களுக்கு இருக்க வேண்டும். அத்தோடு எனது யோசனை என்னவென்றால் புதிய அரசியலமைப்பில் இவை உள்ளடக்கப்பட்டால் மாத்திரமே இந்த அரசியலமைப்பு உயர் ஜனநாயகப் பண்புடைய அரசியல் அமைப்பாக அமையும்.

இந்த முறையை நடைமுறைப்படுத்துவது இலகுவானதல்ல ஆனபோதும், நாம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதாக இருந்தால் இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய செயன்முறையை தயாரித்துக்கொள்ள வேண்டும்.

இதன்போது எமக்கு தொழில்நுட்ப உதவியை வழங்க முடியும். மேலும் நவீன உலகில் உயர்தர ஜனநாயக செய்முறைக்காக இது போன்ற நடைமுறை பிரச்சினைகளுக்கு விடைகண்டுள்ளனர். அவ்வாறு இடம்பெறவில்லை என்றால் தொடர்ச்சியாக மக்களது அபிலாசைகள் திரிபடையும்.

# அரசியலமைப்புத் திருத்தமொன்றை விரைவில் நிறைவேற்ற வேண்டும்

**ரவூஃப் ஹக்கீம்**
பாராளுமன்ற உறுப்பினர் - ஐக்கிய மக்கள் சக்தி



காலிமுகத் திடல் போராட்டத்தின் பின்னர், நாட்டில் அரசியலமைப்பு ரீதியான மாற்றமொன்று இடம்பெற வேண்டும் என்ற தலைப்பு புதியதொரு கட்டத்தை அடைந்துள்ளது. குறிப்பாக அரசியலமைப்பில் சனநாயகத்தின் தூண்கள் என நாம் அழைக்கின்ற நிறைவேற்றதிகாரம், சட்டவாக்க சபை மற்றும் நீதிமன்றம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை சமநிலையோடு பேணிச் செல்வதே சிறந்த அரசியலமைப்பொன்றின் பண்பாக உள்ளது. அதனையும் அவ்வாறே பேணிக்கொண்டு, சனநாயகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான பிரயத்தனத்தைச் செய்வதாயின், இப்போதிருக்கும் அரசியலமைப்பில் அதற்கான விதிமுறையொன்று உள்ளது. அவ்வாறே, அரசியலமைப்புக்கு வெளியே மக்கள் பங்கேற்புடன் மேற்கொள்வதாயின், அதற்கான விதிமுறைகளும் காணப்படுகின்றன.

இப்போதைக்கு பாராளுமன்றத்தில் அரசியல் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களின் பங்கேற்பில் இடைக்கால ஆட்சியொன்று பற்றி கலந்துரையாடப்பட்டு வருகின்றது. அத்துடன் இப்போதைக்கு மட்டுப்படுத்தப்பட்ட ரீதியில் தேவைப்பட்ட சில ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஏற்கனவே அரசியலமைப்புத் திருத்தமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றதிகாரத்தின் பலத்தைக் குறைத்து பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரங்களை அதிகரிக்கின்ற சில முன்மொழிவுகள் அதில் அடங்கியுள்ளன. ஏற்கனவே காணப்பட்ட, 19வது திருத்தச் சட்டமும் அதற்கு அப்பால் சென்ற மேலும் சில ஏற்பாடுகளும் உள்ளடக்கப்படவுள்ளன. இவை சரியாக செயற்படுத்தப்பட்டால், இப்போது மக்களிடையே காணப்படும் விவாதத்தை ஓரளவிற்கேனும் சமரசம் செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றேன். ஆனால், முற்றிலும் புதியதொரு அரசியலமைப்பொன்றைத் தயாரிப்பதற்கான தேர்வுக்குழுவொன்றை உருவாக்கி, அதனூடாக அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான முயற்சியொன்று உள்ளது.

## சில கட்டங்களாக வகுத்து செயற்படுத்த வேண்டும்

அதனைத் தவிர்த்து மக்கள் பங்கேற்புடன் செய்வதாக இருந்தால், முன்னர் எழுபதுகளில் மேற்கொண்டதைப் போன்று, மக்கள் பேரவையொன்றை பாராளுமன்றத்துக்கு வெளியே உருவாக்குதல். அவ்வாறான முயற்சியொன்றையும் எடுக்கலாம். இவையனைத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக, பொதுவாக உலகில் அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது பின்பற்றப்படும் விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும். அவற்றை அணுகுவதற்கு மக்களிடம் அதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வது அவசியம். அதனை மேலுமொரு தேர்தலுக்குச் செல்வதன் மூலமே மேற்கொள்ள முடியும். அதையே நாமும் எதிர்பார்க்கின்றோம்.

இந்த விதிமுறைகளின் ஊடாக, நடுநிலையான, நாட்டு மக்களின் தற்போதைய உணர்வுகளுக்கு பதிலளிக்கின்ற சரியான அரசியலமைப்பொன்று, குறிப்பாக மூன்று தூண்களான நிறைவேற்றதிகாரம், சட்டவாக்க சபை, நீதிமன்றம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை சமநிலையோடு நாம் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம். அதனைச் செய்வதற்கான சில கட்டங்களாக, குறுகிய கால முறையில் 19வது திருத்தச் சட்டத்தில் காணப்பட்ட ஏற்பாடுகளை சமர்ப்பித்து, அதனூடாக நிறைவேற்றதிகாரத்தின் அதிகாரத்தைக் குறைப்பதற்கும், பாராளுமன்ற அதிகாரங்களை அதிகரிப்பதற்கும், அவ்வாறே ஒட்டுமொத்தமாக அரசியலமைப்பை மாற்றியமைத்து, தேர்தல் முறைமை உள்ளிட்ட ஏனைய தேவைகள் உள்ளடக்கப்படும் அரசியலமைப்பொன்றை சமர்ப்பிப்பதற்கான அவகாசம் இப்போது கிட்டியுள்ளது.

**அதனைத் தவிர்த்து மக்கள் பங்கேற்புடன் செய்வதாக இருந்தால், முன்னர் எழுபதுகளில் மேற்கொண்டதைப் போன்று, மக்கள் பேரவையொன்றை பாராளுமன்றத்துக்கு வெளியே உருவாக்குதல். அவ்வாறான முயற்சியொன்றையும் எடுக்கலாம். இவையனைத்தையும் மேற்கொள்வதற்கு முன்னதாக, பொதுவாக உலகில் அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது பின்பற்றப்படும் விதிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும்.**

## நிறைவேற்றதிகாரத்தின் அதிகாரத்தை மட்டுப்படுத்தல்

தாம் விரும்பியவாறு பாராளுமன்றத்தைக் கலைப்பதில் நிறைவேற்றதிகாரத்திடம் உள்ள அதிகாரத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்ற தேவைப்பாடு உள்ளது. அதற்கான முயற்சியை எடுத்தே ஆகவேண்டும். அவ்வாறே சட்டவாக்க சபையினால், அமைச்சரவையைத் தேர்ந்தெடுக்கும் போதும், பிரதமரை நியமிக்கின்ற போதும், நிறைவேற்று அதிகாரத்துக்குள்ள விருப்புரிமையைக் குறைக்க வேண்டும். அல்லது முற்றாக நீக்க வேண்டும். அதாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை அகற்றி, பாராளுமன்றப் பெரும்பான்மை மூலம் நியமிக்கப்படுகின்ற பிரதமருக்கு அவ்வதிகாரங்களைக் கையளிக்கின்ற அரசியலமைப்பு முறையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையொன்று உள்ளது. அவ்வாறு அமைச்சர்களின் அதிகாரங்களும் உறுதியாகத் தீர்மானிக்கப்படுகின்ற விதிமுறையொன்று உள்ளடக்கப்பட வேண்டும். இல்லையேல் பிரதமர் அல்லது ஜனாதிபதி அமைச்சரவையை தேவைக்கேற்றவாறு, விரிவாக்கும் வாய்ப்பைக் குறைக்க வேண்டும். மட்டுப்படுத்த வேண்டும். அது தவிர, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக வல்லுனர்கள் ஒன்றிணைந்த சட்டவாக்க சபையொன்றின் ஊடாக முக்கியமான பதவிகளுக்கான நியமனங்கள் வெளிப்படையானவையாகவும், தகைமையானவர்கள் நியமிக்கப்படும் வகையிலும், வல்லுனர்கள் அந்தந்த இடங்களுக்கு வரக்கூடியவாறும், மக்கள் உரிமைகளைப் பாதுகாக்கின்ற விதிமுறையொன்று அவசியம் என்ற கோரிக்கையொன்றும் உள்ளது. இவ்வாறான பல திருத்தங்கள் உள்ளடங்கிய புதிய அரசியல் திருத்தமொன்றை மிக விரைவில் நாம் நிறைவேற்ற வேண்டும்.

# இந்தப் பாராளுமன்றத்தால் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவர முடியாது

**மனோ கணேசன்**
பாராளுமன்ற உறுப்பினர் - ஐக்கிய மக்கள் சக்தி



குடியரசு என்ற வகையில் எம்முன்னே இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று அரசியலமைப்பில் திருத்தங்களைச் சேர்ப்பது. அடுத்தது முற்றுமுழுதாக புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவது. இந்தப் பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவர முடியாது. அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருகின்ற செயற்பாடு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும். சர்வசன வாக்கெடுப்பொன்றுக்கு செல்ல முடிந்தாலும், பாராளுமன்றம்தான் அடிப்படையானது. இந்தப் பாராளுமன்றம் உருக்குலைந்த பாராளுமன்றம். வெளியேயுள்ள மக்களின் கருத்து பாராளுமன்றத்தில் காட்சிப்படுத்தப்படுவதில்லை. பிரதிநிதித்துவப்படுத்தப்படுவது இல்லை. அதனை அனைவரும் அறிவார்கள். திருத்தம் தான் இப்போது செய்யக் கூடிய ஒன்று.

20 தடவைகள் அரசியலமைப்பு திருத்தப்பட்டுள்ளது. அடுத்த திருத்தமானது இலக்கங்களாக எடுத்துக் கொண்டால் 21வது இலக்கம்.

**17ல் தான் முதன் முறையாக கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து அரசியலமைப்பில் சனநாயக பண்புகளைக் கொண்டுவந்தன. 18வது அரசியலமைப்புத் திருத்தத்தினால் அதனை முற்றாக இராஜபக்ச அரசாங்கம் இரத்துச் செய்தது. நாமும் கைவிடாமல் மீண்டும் 19ஐக் கொண்டுவந்தோம். மீண்டும் ராஜபக்ஸமார் வந்து 20ஐக் கொண்டு வந்தார்கள். 17க்கும் 19க்கும் கையை உயர்த்தியவன்தான் நான். அவ்வாறே 18க்கும் 20க்கும் எதிர்ப்புத் தெரிவித்தவன்.**

இப்போது அதைப்பற்றி எங்களுக்குக் கொஞ்சம் தெரியும். ஏனெனில் இதற்கு முன்னர் 19 இருந்தது. சனநாயக பண்புகள் அரசியலமைப்பிற்குள் கொண்டு வரப்பட்டன. அதற்கு முன்னர் 18 இருந்தது. அதற்கு முன் 17 இருந்தது. 17ல் தான் முதன் முறையாக கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இணைந்து அரசியலமைப்பில் சனநாயக பண்புகளைக் கொண்டுவந்தன. 18வது அரசியலமைப்புத் திருத்தத்தினால் அதனை முற்றாக இராஜபக்ச அரசாங்கம் இரத்துச் செய்தது. நாமும் கைவிடாமல் மீண்டும் 19ஐக் கொண்டுவந்தோம். மீண்டும் ராஜபக்ஸமார் வந்து 20ஐக் கொண்டு வந்தார்கள். 17க்கும் 19க்கும் கையை உயர்த்தியவன்தான் நான். அவ்வாறே 18க்கும் 20க்கும் எதிர்ப்புத் தெரிவித்தவன். அதுதான் எமது கட்சியின் நிலைப்பாடு. எனவே சனநாயகத்தைப் பற்றிய சனநாயகப் பண்புகளை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வர வேண்டும் எனப் பேசுவதற்கு ஏனையவர்களை விட எனக்கும் எனது கட்சிக்கும் உரிமையுள்ளது என நான் நினைக்கின்றேன்.

## தேசிய பிரச்சனைக்கு தீர்வுகள் அவசியம்

கட்சிக்குள்ளே சனநாயகம் பற்றி நாம் பேசுகின்றோம். ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கின்ற போது எமது கட்சி தீர்மானங்களையும் தீர்வுகளையும் எடுக்கின்ற குழுவில் வேறு யாரையும் விட சனநாயகம் இருக்கின்றது என நான் நினைக்கின்றேன். கட்சித் தலைவர் என்ற ரீதியில் நான் அதனை நம்புகின்றேன். இந்த அரசியலமைப்பிற்குள் மீண்டும் 19ஐ மட்டும் கொண்டுவந்து அத்தோடு முடித்துவிட முடியாது என்பது அடுத்த விடயம். தமிழ் மக்கள் என்ற வகையில் நாம் ஒடுக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு கட்சி. தேசிய பிரச்சனைக்கு யாரும் தீர்வுகளைத் தேடவில்லை. அரசியலமைப்பில் 13வது அரசியல் திருத்தம் உள்ளது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனைத் தாண்டிச் செல்ல வேண்டும். 13, ஆக வேண்டும் என நாம் குறிப்பிட்டாலும் இப்போது தர்ட்டீன் மைனஸ் ஆகியுள்ளது. அவை பற்றியும் அவதானத்தைச் செலுத்த வேண்டும்.

**சுயாதீன ஆணைக்குழுக்கள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, ஊடக சுதந்திரம், பொலிஸ் நீதிமன்றம் என்பவற்றில் சுயாதீனத்தைக் கொண்டு வந்துவிட்டால் எல்லாம் சரி என சிவில் சமூகம் சிந்திக்குமாயின் அது சரியானது அல்ல. நாம் அந்தக் கருத்தில் இருக்கின்றோம். ஆனால் அதற்கு அப்பாற் சென்று தேசிய பிரச்சனைக்குத் தீர்வுகளைத் தேட வேண்டும்.**

சுயாதீன ஆணைக்குழுக்கள், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, ஊடக சுதந்திரம், பொலிஸ் நீதிமன்றம் என்பவற்றில் சுயாதீனத்தைக் கொண்டு வந்துவிட்டால் எல்லாம் சரி என சிவில் சமூகம் சிந்திக்குமாயின் அது சரியானது அல்ல. நாம் அந்தக் கருத்தில் இருக்கின்றோம். ஆனால் அதற்கு அப்பாற் சென்று தேசிய பிரச்சனைக்குத் தீர்வுகளைத் தேட வேண்டும். இன்று என்ன நடந்திருக்கின்றது? இந்த நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாக அமைவது தேசிய பிரச்சனை தான். பிரச்சனை முடிந்துவிடவில்லை. யுத்தம்தான் முடிவடைந்துள்ளது. அந்த யுத்தத்திற்குப் பாரிய பணத்தொகையை செலவிட நேர்ந்தது. அபிவிருத்திக்கும் மக்களின் பிரச்சனைகளுக்கும் பாவிக்க வேண்டிய பணம் அதற்கு செலவிடப்பட்டது. அதுமட்டுமல்ல, யுத்தம் வெல்லப்பட்டது என்ற விடயத்தின் அடிப்படையில் ராஜபக்ஸமாருக்கு எதைவேண்டுமானாலும் செய்துவிட்டுப் போக சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. திருடுவதற்கு, கொலை செய்வதற்கு, கடத்துவதற்கு, ஊடகவியலாளர்களைத் தாக்குவதற்கு, சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் தாக்க, கொன்றுவிட என எந்தவொரு செயலைச் செய்வதற்கும் மக்கள் அனுமதியை வழங்கினார்கள். 69 இலட்சம் பேர்தான் ராஜபக்ஸமாரைக் கொண்டு வந்தார்கள். இப்போது போராட்டமும் ஆர்ப்பாட்டமும் செய்வதும் அவர்கள்தான். 'கோட்டா கோ ஹோம்' என்று இப்போது சொல்கின்றார்கள். நான் இதை 2004ல் வெள்ளை வேன்களில் கடத்திச் செல்லும் போது சொன்னேன்.

## விகிதாசார மற்றும் விருப்பு வாக்குமுறை இருக்க வேண்டும்.

நாம் அப்படிச் சொல்லிவிட்டு விலக மாட்டோம். ஒன்றிணைந்து கைகோர்த்திருப்போம். இப்போது போராட்டத்திற்கு எதிராக ஏற்பட்டுள்ள

அடக்குமுறையை நாம் கண்டிக்கின்றோம். அதனை எதிர்க்கின்றோம். தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றவொரு கருத்து உள்ளது. ஆனால் இப்போதுள்ள விகிதாசார முறையை மாற்றுவதற்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம். சிவில் சமூகம் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். சிவில் சமூகத்தில் ஒரு தவறான மூடநம்பிக்கை உள்ளது. அவ்வாறே விருப்பு வாக்கு முறையை இரத்துச் செய்ய வேண்டுமென்ற ஒரு பேச்சும் உள்ளது. கட்சியிலிருந்து 20பேர் போட்டியிடுவார்களாயின், மூவரை மக்கள் விருப்பு வாக்குகளினால் தேர்ந்தெடுத்து அனுப்பலாம். அது சனநாயகத்தின் ஒரு பண்பு. விகிதாசார முறையால் தான் சிறிய கட்சிகள் பாராளுமன்றத்திற்கு வருவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. இல்லையேல் இரண்டு கட்சிகளால் மட்டுமே பாராளுமன்றத்திற்கு வர முடியும். அது இன்னுமொரு ஏகாதிபத்திய பித்து. அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது போராட்டக்காரர்கள் இருக்கின்றார்கள். இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவது எப்படி? அதற்கான சந்தர்ப்பம் இந்த முறையின் மூலம் தான் உள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கு நேரம் இல்லை. இப்போது எல்லோரும் சேர்ந்து உறுதியாக 19வது திருத்தத்தைக் கொண்டு வந்து 20ஐ இரத்துச் செய்து, மிக விரைவாக தேர்தலொன்றுக்குச் செல்வோம். புதிய மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வோம். புதிய உறுப்பினர்கள் வருவார்கள். அந்தப் போராடும் சகோதரர்களும் வரலாம். வந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவோம். எவ்வாறாயினும் இந்தப் பாராளுமன்றத்துடன் அதனைச் செய்ய முடியாது. இந்தப் பாராளுமன்றத்தில் 134ஐ வழுங்கி ராஜபக்ஸ மாரின் பிரதிநிதியை ஜனாதிபதியாக்குகின்றனர். மக்கள் சொல்வது அதுதானா? அது ஒரு வேடிக்கை. அதனால், இந்த வேடிக்கையான பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பொன்றை எதிர்பார்க்க முடியாது.

**புதிய அரசியலமைப்பொன்றைக் கொண்டுவருவதற்கு நேரம் இல்லை. இப்போது எல்லோரும் சேர்ந்து உறுதியாக 19வது திருத்தத்தைக் கொண்டு வந்து 20ஐ இரத்துச் செய்து, மிக விரைவாக தேர்தலொன்றுக்குச் செல்வோம். புதிய மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வோம். புதிய உறுப்பினர்கள் வருவார்கள். அந்தப் போராடும் சகோதரர்களும் வரலாம். வந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவோம்.**

## 225ம் வேண்டாம் என்பது தவறு

ஆனால் ஒன்றைச் சொல்ல வேண்டும். அந்த 225ம் வேண்டாம் எனச் சொல்லப்படும் கதை தவறானது. நான் 225ல் ஒருவன். நான் திருடனல்ல. நான் தவறான வேலைகளைச் செய்ததில்லை. கெட்ட வார்த்தை பேசியதில்லை. கொமிஸ் பெற்றுக் கொண்டதில்லை. என்னுடைய மக்களுக்காக மட்டுமே முன்வருகின்றேன். எனது மக்கள்தான் எனக்கு வாக்களித்தார்கள். போராட்டம் நடத்தும் மனிதர்கள் அல்ல. அப்படியாயின் எங்களைப் போகச் சொல்வது எப்படி? சனநாயகம் என்ற நாணயத்தில் இரண்டு பக்கங்கள் உள்ளன. ஒரு புறத்தில் வாக்குகளைப் பெறுபவர்கள். இன்னொரு பக்கத்தில் வாக்களிப்பவர்கள். வாக்குகளைப் பெற்றுக் கொள்பவர்கள் தவறு செய்தால், போராடி அனுப்ப முடியுமல்லவா? அவ்வாறே வாக்களிக்கும் மக்களும் திருந்த வேண்டும். அரசியல் ரீதியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆராய்ந்து பார்க்க வேண்டும். சரியான நபருக்கு வாக்களிக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் நல்லது. இல்லையேல் அடுத்த தேர்தலில் இதேபோன்ற ஒரு குழுவை வாக்களித்து பாராளுமன்றத்துக்கு அனுப்புவார்கள். அதனால் இனவாதம், தீவிரவாதம், பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பணத்தை வாங்கிக் கொண்டு வாக்களிப்பதை நிறுத்திவிட்டு, தமது நாட்டைப் பற்றிச் சிந்தித்து, வாக்கினைப் பாவிக்க வேண்டும். நேர்மையான, அர்ப்பணிப்புள்ள, குறிக்கோளுடைய, மக்களை நேசிக்கின்ற, இந்தப் பல்லின நாட்டில் குறைந்தது இரண்டு மொழிகளையாவது பேசக் கூடிய ஆற்றலுள்ள வேட்பாளருக்கு வாக்களித்து நியமிக்க வேண்டும். அப்போது நேர்மறையான எதிர்காலமொன்று உருவாகும். அவ்வாறின்றி ஒரு தரப்பினரை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை.

# அபிவிருத்திக்கும் அரசியலமைப்பு ரீதியான சமநிலை அவசியம்

**பாட்டலி சம்பிக்க ரணவக்க**
பாராளுமன்ற உறுப்பினர் - ஐக்கிய மக்கள் சக்தி



புதியதொரு அரசியலமைப்பு தொடர்பான கருத்து மீண்டும் தோன்றியுள்ளது. 2022 ஏப்ரல் 12ம் திகதி அரசு வங்குரோத்துத் தன்மையை வெளியிட்டதே அதற்குக் காரணம். இதனால் மக்கள் முகங்கொடுக்க நேர்ந்துள்ள பிரச்சனைகளோடு தமது பிரதிநிதிகளையும் ஆட்சியாளர்களையும் பாரதூரமான முறையில் கேள்விகேட்கத் தூண்டப்பட்டுள்ளார்கள். அதனாலேயே பாராளுமன்றத்திற்கு வெளியே நேரடி சனநாயகம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் பிரதிநிதித்துவ முறையைப் பற்றிய கலந்துரையாடலொன்றும் சமூகத்தில் ஏற்பட்டுள்ளது. இலங்கையின் நெருக்கடியை எடுத்துக் கொண்டால், அதற்கு ஒரு வரலாற்று ரீதியான காரணம் இருந்தாலும், இந்த நெருக்கடி இந்த அளவுக்கு முற்றி வளர்ந்ததற்கு 2010ன் பின்னர், எம்மால் எடுக்கப்பட்ட வணிகமல்லாத கடன்களை எந்தவொரு வருமானத்தையும் ஈட்ட முடியாத கருத்திட்டங்களில்

**இந்த அளவுக்கு முற்றி வளர்ந்ததற்கு 2010ன் பின்னர், எம்மால் எடுக்கப்பட்ட வணிகமல்லாத கடன்களை எந்தவொரு வருமானத்தையும் ஈட்ட முடியாத கருத்திட்டங்களில் முதலீடு செய்ததும், அதிலிருந்து பெரும் பணத்தொகையை கொள்ளயடித்ததுமே காரணம். அது அரசியலமைப்பிலுள்ள சிக்கலா என்ற கேள்வி எம்முன்னே காணப்பட்டாலும், அதன் பின்னணியில் ஆளுகை (Govewernance) பற்றிய கேள்வி உள்ளது.**

முதலீடு செய்ததும், அதிலிருந்து பெரும் பணத்தொகையை கொள்ளயடித்ததுமே காரணம். அது அரசியலமைப்பிலுள்ள சிக்கலா என்ற கேள்வி எம்முன்னே காணப்பட்டாலும், அதன் பின்னணியில் ஆளுகை (Govewernance) பற்றிய கேள்வி உள்ளது. அதனால், அடுத்த அரசியலமைப்பொன்றின் மூலம் பெரும்பாலும் கடந்தகால அரசியலமைப்புகளில் சிறுபான்மை இன மக்களின் துன்பதுயரங்கள் அல்லது அபிலாசைகள் பற்றிப் பேசினாலும் இப்போது அதைக் காட்டிலும் விரிவான துறையொன்றில் சனநாயகம், மனித உரிமைகள் மற்றும் பொருளாதார நடத்தைகள் தொடர்பான விடயங்களைக் கலந்துரையாடலுக்கு எடுப்பதற்கான வாய்ப்புகள் விரிவாக்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல்

பொதுவாக அரசியலமைப்பு பற்றிய அரசியல் விஞ்ஞானத்தின் வரைவிலக்கணங்களுக்கு ஏற்ப, பொருளாதாரம் பற்றிய விடயங்கள் அரசியலமைப்பில் பிரதிபலிக்கப்படுவதில்லை. அவை கட்டளைச் சட்டங்களால் பிரதிபலிக்கப்படுகின்றன. எனினும் இப்போதிருக்கின்ற நிலைமையின் கீழ், ஒவ்வொரு ஆட்சியாளருக்கும் தன்னிச்சையாக தீர்மானமெடுப்பதற்கு இடமளிக்காது, அரசியலமைப்பு ரீதியான சமநிலையொன்று அபிவிருத்தியென்ற விடயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தோன்றியுள்ளது. தேசிய பௌதீகத் திட்டத்தை முன்மொழிந்துள்ளோம். அவ்வாணைக்குழுவை அரசியலமைப்பில் உள்ளடக்கி அதற்கு வெளியேயான அபிவிருத்திச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்மொழிந்துள்ளோம்.

அது தவிர மரபு ரீதியான கட்சி அரசியல் மீது பாரதூரமான கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. எமது நாட்டில் புரட்சிகரமான அரசியலில் ஈடுபட்டவர்கள் ஆயுதப் போராட்டத்தினால் இந்த முறையை புரட்டிப் போட்டுவிட எப்போதும் எதிர்பார்த்தனர். வேறு முறையில் சமூக முறையொன்றை தாபிக்க முயன்றனர். அவை தோல்வியடைந்தன. அதற்கேற்ப சனநாயக முறை மட்டும் இலங்கையில் தோல்வியடைந்துவிடவில்லை. ஆயுத அரசியலும் பாரதூரமான முறையில் தோல்வியுற்றிருக்கின்றது. அவ்வாறே ஆயுத அரசியல் மூலம் கட்டியெழுப்ப முனைந்த சோசலிசம் போன்ற விடயங்கள் கியூபா போன்ற நாடுகளைப் பார்க்கின்ற போது மிக மோசமான முறையில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அந்த சமூக முறைமைகள் வீழ்ச்சியடைந்திருந்தாலும் இன்னும் அந்த நினைவுகளைச் சுமந்துகொண்டுள்ளவர்கள் காணப்படுவதால் அச் சிக்கல்கள் எழுந்துள்ளன.

## கட்சிகளின் உள்ளக சனநாயகம்

எனவே தாம் பின்பற்றுகின்ற பொருளாதார முறை எது என்பது பற்றி மாத்திரமன்றி கட்சி முறை மற்றும் கட்சித் தலைவர்களுக்குக் கிடைத்திருக்கும் எல்லையற்ற அதிகாரங்கள், கட்சிகளுக்குள்ளே சனநாயகம் இல்லாமை, தோல்வியின் போது விலகிச் செல்லாதிருக்கும் பண்பு, மீண்டும் மீண்டும் பாராளுமன்றத்திலோ, மாகாண சபையிலோ, பிரதேச சபையிலோ புகுந்து கொள்ள எடுக்கின்ற வெறுக்கத்தக்க முயற்சி, அவ்வாறே இந்த நாட்டில் குடும்பவாதத்தால் ஏற்படுத்தப்பட்டு பாதிப்பு போன்றவை பற்றியும் அவதானம் செலுத்த வேண்டும். இப்போது பாராளுமன்றத்தில் மூன்றில் ஒன்று உறவினர்கள், இன்னுமொரு குழுவினர் முறைகேடான பணத்தைக் கொண்டு விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொண்டு வந்தவர்கள். அவ்வாறே ஊடகங்களால் விடுக்கப்பட்ட அழுத்தங்கள், குறிப்பாக இலத்திரனியல் ஊடக உரிமையாளர்கள் தமது குழுக்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்காக பாரிய செயற்பாடொன்றை கட்டவிழ்த்து விடுவதுடன் தாம் விரும்பாதவர்களைத் தோற்கடிப்பதற்கும் அபகீர்த்திக்கு ஆளாக்குவதற்குமான செயல்களையும் வழிநடத்துகின்றனர். இந்த ஊடகங்கள் மற்றும்

**வெகுசன ஊடகங்களை எடுத்துக் கொண்டால், குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களின் அலைவரிசைகள் மக்களுக்குரித்தானவை. அவற்றை மிகவும் கேவலமான முறையில் மக்களை திசைதிருப்புவதற்கும், தாம் விரும்பாத நபர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்குவதற்கும், தமது குழுவினரைக் கொண்டு வருவதற்கும் ஈடுபடுத்துகின்றனர்.**

கட்சிகளில் உள்ளக சனநாயகம் பற்றிய பாரிய கலந்துரையாடலொன்று இப்போது ஆரம்பிக்கப்பட வேண்டியுள்ளது.

> **பணத்தைச் செலவிடுவது தொடர்பில் குறித்த கட்டுப்பாடொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்க வேண்டும். பெரும்பாலும் இதற்கான அவதானம் அரச சொத்துக்கள் மீது மட்டுந்தான் செலுத்தப்படுகின்றது. அரச சொத்துக்கள் மட்டுமல்ல முறையற்ற விதத்தில் ஈட்டப்படும் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தேர்தல் செயற்பாடுகளில் குறிப்பிட்ட சட்டவிதிகளை விதிப்பதை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும்.**

## வெகுசன ஊடகமும் முறைகேடான மூலதனமும்

வெகுசன ஊடகங்களை எடுத்துக் கொண்டால், குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்களின் அலைவரிசைகள் மக்களுக்குரித்தானவை. அவற்றை மிகவும் கேவலமான முறையில் மக்களை திசைதிருப்புவதற்கும், தாம் விரும்பாத நபர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்குவதற்கும், தமது குழுவினரைக் கொண்டு வருவதற்கும் ஈடுபடுத்துகின்றனர். அவ்வாறே போதைப் பொருள் வியாபாரமாகட்டும், அரச கொந்தராத்துகளாகட்டும், இவ்வாறான முறைகளில் ஈட்டப்படும் பில்லியன் கணக்கில் ஈட்டப்படும் முறைகேடான நிதி தேர்தல்களின் போது முதலீடு செய்யப்படுகின்றது. அவர்கள் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் இன்று பாராளுமன்றத்தில் முதல் வரிசையில் அமர்ந்திருக்கின்றனர். இவ்வாறான நிலைமைகளுடன், சனநாயகம், மக்களின் வாக்குகள் என்பன கேலிக்குரியனவாக மாறியுள்ளன. இந்த குடும்பவாதிகள், கேவலமானவர்கள் மற்றும் ஊடக பொம்மைகளால் ஆட்டப்படும் அரசியலுக்குப் பதிலாக மக்களின் உண்மையான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த அரசியலமைப்பில் கட்சி உள்ளக சனநாயகத்தையும் வெளிவாரி சனநாயகச் செயற்பாட்டையும் தேர்தற் செயற்பாடுகளையும் வலுப்படுத்த வேண்டியுள்ளது என்பதுதான் எமது நம்பிக்கை.

எமது கருத்திற்கு ஏற்ப, தேர்தல்கள் ஆணைக்குழு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவானது ஒருபுறம் கட்சிகளின் உள்ள சனநாயகமற்ற அரசியலமைப்புகளை நிராகரிக்க வேண்டும். அவ்வாறே தேர்தற் தோல்வியின் பின்னர் பிரதான தலைவர்கள் விலகி ஏனைய தலைவர்கள் அதிகாரத்தில் நியமிக்கப்படும் சனநாயகச் சூழலொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு குறிப்பிட்ட வழக்கமொன்றை நாட்டில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறே வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் போது கட்சிகளின் பிரதேச குழுக்களின் விருப்பம் தொடர்பான விடயத்தை முன்னெடுக்கும் ஆற்றலை அடைய வேண்டும். சில நாடுகளில் வேட்பாளர்களுக்கான ஆரம்பத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அவற்றினூடாகத்தான் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இல்லையேல் ஜனாதிபதி வேட்பாளர்கள், பிரதமர் பதவிக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அது மிகவும் அவசியமானது.

## தேர்தற் செலவுக் கட்டுப்பாடு

இரண்டாவது விடயம் பணம். பணத்தைச் செலவிடுவது தொடர்பில் குறித்த கட்டுப்பாடொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்க வேண்டும். பெரும்பாலும் இதற்கான அவதானம் அரச சொத்துக்கள் மீது மட்டுந்தான் செலுத்தப்படுகின்றது. அரச சொத்துக்கள் மட்டுமல்ல முறையற்ற விதத்தில் ஈட்டப்படும் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தேர்தல் செயற்பாடுகளில் குறிப்பிட்ட சட்டவிதிகளை விதிப்பதை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறே வெகுசன ஊடகம். வெகுசன ஊடகம் தொடர்பில் அச்சு ஊடகம் பற்றி ஒருவகையான பிரச்சனையிருந்தாலும், நாட்டில் பாரிய அளவில் பயன்படுத்தப்படுகின்ற ஊடகம் இலத்திரனியல் ஊடகமாகும். அந்த இலத்திரனியல் ஊடகங்களின் அலைவரிசைகள் நாட்டு மக்களுக்கு உரித்தானதாகும். இணைய வலைத்தளங்கள் மக்களுக்கு உரித்தானது.

அதனால் வலைத்தளத்தையும் இலத்திரனியல் ஊடகத்தையும் குறித்த கட்டுப்பாட்டில், சமநிலையான முறையில் பேணிச் செல்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் இடையீட்டுக்கான அதிகாரத்தை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அளித்தல் அத்தியாவசியமானது. இல்லையேல் இது மிகவும் ஊழல்மிக்க வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

அவ்வாறே பொதுமக்களுக்கும், அரசியலமைப்பிற்கும் வெளியே ஏதேனுமொரு வழக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இப்போது நாடு வங்குரோத்து நிலையிலிருந்தாலும் பின்னர் 'ஐயோ எங்களுக்கு நடந்தது என்ன? யார் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்' என்று சொல்வதைக் காட்டிலும் ஆரம்பத்திலிருந்தே ஒருவகையான புரிதலுடன் செயற்பட்டிருந்தால் இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்காது. எனவே மக்களும் இந்த மரபுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலொன்றைக் கோரிய பின்னர் வேட்பாளர் வெற்றியீட்டினால், அவர் அந்தப் பதவியை வகித்த பின்னர், அரசியலிலிருந்து ஓய்வு பெறுகின்ற, வேட்பாளர் தோல்வியைத் தழுவினால், அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகின்ற, பிரதான தேர்தல் தோல்வியின் பின்னர் கட்சித் தலைவர்கள் அவற்றிலிருந்து விலகி, மற்றவர்களுக்கு அந்த சந்தர்ப்பத்தை வழங்கும் குடும்பவாத மற்றும் முறைகேடான பணத்தை வெறுக்கும் வகையிலான மரபொன்று நாட்டுக்கு மிக முக்கியம்.

# எல்லை நிர்ணயம் தொடர்பில் மாற்று முன்மொழிவு

**மயில்வாகனம் திலகராஜா**
முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் - பிரதம அமைப்பாளர், மலையக அரசியல் அரங்கம்



இலங்கைக்கு பதிய அரசியலமைப்பொன்று அவசியம் என்பது நீண்டகாலமாகப் பேசப்பட்டுவருகின்ற ஒரு தலைப்பு. அதுவும் ஒரு போராட்டம் தான். அந்த போராட்டம் தான் இன்று வீதிக்கு வந்துள்ளது. இதற்கு முன் இதனைச் செய்தவர்கள் இவ்வாறான கருத்துகள் உள்ளன, இன்னின்னவற்றைச் செய்தாக வேண்டும் என எழுத்துமூலம் வழங்கினர். அவ்வப்போது நியமிக்கப்பட்ட அரசாங்கங்கள் அதற்கு முன்வந்தன. மக்களின் கருத்துகளைப் பெறுவதற்காக கடந்த நல்லாட்சி அரசாங்கம் அதற்கென தனியான குழுவொன்றையே நியமித்தது. கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடம் அரசியலமைப்பு தொடர்பான ஆலோசனைகளைக் கோரியது. ஆனால் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் 'நான் ஒரு ஆலோசனையை வழங்க வேண்டும்.' என நினைத்த மக்களே தம்மை தமது சமையலறையிலும், பிள்ளையின் பாடசாலை நடவடிக்கைகள் போன்ற விடயங்களிலும், பிரச்சனை வந்தவுடன் 'சிஸ்டம் சேஞ்ச்' ஒன்று வேண்டும் என்ற நிலைக்கு வந்தார்கள். அதுவும் அரசியலமைப்பை மாற்றுகின்ற ஒரு சந்தர்ப்பம் தான்.

## அரசியலமைப்பு உருவாக்கத்தின் முன் அனுபவங்கள்

எனவே நாம் இதற்கு என்ன செய்யலாம்...?

**எமது முதல் அரசியலமைப்பு கூட 1972ல்தான் உருவாகின்றது. எனினும் எமக்கென்று உருவாக்கிய ஒன்றின் மூலம் 5 வருடங்களேனும் நிருவாகம் செய்ய முடியாமற் போனது. முதலாவது அரசியலமைப்பை உருவாக்கும் போதே நாம் தவறொன்றை இழைத்துள்ளோம். அதனை யார் தயாரித்தது?**

சுதந்திர இலங்கையின் 74 வருடங்களைப் பற்றிப் பேசுகின்றோம் அல்லவா? 74 வருடங்களில் அரைவாசி வரைக்குமே அதாவது 1948லிருந்து 1978 வரையுமே எமக்கென்றொரு அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளாத நாடுதானே நமது நாடு என்ற கருத்து என்னிடம் தொடர்ச்சியாகக் காணப்பட்டது. நாம் எம்மையே எப்படி நிருவகிப்பது என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும் இல்லை. நாம் பிரித்தானிய அரசு கொடுத்துவிட்டுப் போனதை எடுத்துச் சென்றோம். எமது முதல் அரசியலமைப்பு கூட 1972ல்தான் உருவாகின்றது. எனினும் எமக்கென்று உருவாக்கிய ஒன்றின் மூலம் 5 வருடங்களேனும் நிருவாகம் செய்ய முடியாமற் போனது. முதலாவது அரசியலமைப்பை உருவாக்கும் போதே நாம் தவறொன்றை இழைத்துள்ளோம். அதனை யார் தயாரித்தது? மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு எமது இலங்கையின் தனித்துவத்தைக் காத்துக் கொள்ளக் கூடியவாறு அதனைச் செய்தார்களா? அல்லது அரசியல் வேலைத்திட்டமொன்றுக்கு ஏற்ப தயாரித்தார்களா என்ற கேள்வி வருகின்றது. அதன் பின்னர் 1978ல் இரண்டாவது அரசியலமைப்பு என, எமக்கென்ற ஒன்றைத் தயாரித்தார்கள். அதிலுள்ள பிரச்சனைகள்தான் இன்னமும் அனுபவிக்கப்படுகின்றன.இலங்கையின் தனித்தன்மைக்குப் பொருந்துகின்ற அரசியலமைப்பொன்றுக்குப் பதிலாக ஒவ்வொரு நாடுகளிலிருந்து அங்குமிங்குமாகச் செருகப்பட்ட தயாரிப்பையே அதன் மூலமும் செய்தார்கள்.

## நிருவாக முறையிலும் பிரதிநிதித்துவ முறையிலும் பொருத்தப்பாடின்மை

இவையனைத்தையும் பார்க்கும் போது எமது நாட்டில் உள்ள பெரும்பாலான பிரச்சனைகளுககுக் காரணம் அரசியல் மட்டுமேயல்ல. எமது நாட்டின் அடிப்படைப் பிரச்சனை நிருவாகத்தோடுதான் இருக்கின்றது. எந்தளவுக்கு எமது நிருவாகமும், தேர்தல் முறையும், அரசியலும் ஒன்றுடனொன்று பொருந்துகின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இந்த பிரதிநிதித்துவத்தில் தவறொன்றுள்ளது. மக்களின் பிரதிநிதித்துவம் சரியாக இடம்பெறுவதில்லை. பிரதிநிதித்துவம் மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான சேவைகள் உரியவாறு இடம்பெறுவதில்லை. நாம் தேர்தல் முறையொன்றின் மூலம் எமது பிரதிநிதியை நியமிக்கின்றோம்.

அவரிடமிருந்து சேவை எவ்வாறு கிடைக்கின்றது? அவர் கையிலிருந்து எடுத்துத் தருவதில்லையல்லவா? அவர் நிருவாக முறையின் ஊடாகவே எடுத்துக் கொடுக்கின்றார். எமக்கு நிருவாக முறையொன்று உள்ளது. அமைச்சுகள் உள்ளன. அமைச்சுச் செயலாளர்கள் உள்ளார்கள். மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் என்ற முறையொன்று உள்ளது. இன்னொரு புறத்தில், நியமிக்கப்படுகின்ற பிரதிநிதிகள் உள்ளார்கள். தேர்தல்கள், வட்டார முறை, மாவட்ட முறை எனச் செல்கின்றது. எனினும் ஒன்றுக்கொன்று சமமானவை அல்ல. ஒரு உறுப்பினர் எந்தளவு எண்ணிக்கையிலான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார், அவர் எவ்வளவு மக்களுக்கு சேவை செய்கின்றார் என்ற கேள்வி எழுகின்றது. இலெக்டரோல் சிஸ்டம் அல்லது தேர்தல் வட்டாரம் என்பது சிறியது. அவர் சேவையை வழங்க வேண்டிய நிருவாகப் பிரிவு பெரியது. இவ்விரண்டுக்கும் இடையே பெரியதொரு இடைவெளி காணப்படுகின்றது. எனவே இலங்கையில் எல்லை நிர்ணயத்தை முதலில் சரியாகச் செய்து கொள்ள வேண்டும்.

## சரியான எல்லை நிர்ணயமொன்று அவசியம்

உதாரணமாக இப்படிச் சிந்திப்போம். ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருக்க வேண்டிய மக்கள் பிரிவைப் பற்றி எமக்கு குறிப்பிட்ட தீர்மானமொன்று உள்ளதா? ஒரு பிரதேச செயலகப் பிரிவின் கீழ் எந்தளவு மக்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து உள்ளதா? அடுத்தது மாவட்ட ரீதியாக. இன்னொரு புறமாகப்

**எமது நாட்டில் உள்ள பெரும்பாலான பிரச்சனைகளுககுக் காரணம் அரசியல் மட்டுமேயல்ல. எமது நாட்டின் அடிப்படைப் பிரச்சனை நிருவாகத்தோடுதான் இருக்கின்றது. எந்தளவுக்கு எமது நிருவாகமும், தேர்தல் முறையும், அரசியலும் ஒன்றுடனொன்று பொருந்துகின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.**

பார்ப்போம். பாராளுமன்றத்தில் மக்கள் சாரியாக பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றார்களா? இந்தப் பிரச்சனைக்கு இவ்வாறான மாற்று வழியொன்றை ஆலோசிக்க முடியும். முதலில் கிராம உத்தியோகத்தர் பிரிவொன்று தொடர்பில் ஒரு எல்லையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறான மூன்று பிரிவுகளைச் சேர்ப்பதால் ஒரு பிரிவு உருவாகின்றது. அதில் பிரதேச சபைக்கோ நகரசபைக்கோ ஒரு பிரதிநிதி நியமிக்கப்படுவார். அவ்வாறே பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தாக வேண்டிய மக்கள் தொகை பற்றிய ஒரு அளவுகோலைத் தயாரித்து அவ்வாறான இரு அதிகாரப் பிரதேசங்களை ஒன்றிணைத்து மாகாணசபைப் பிரிவொன்றை நாம் உருவாக்கிக் கொள்ளலாம். அவ்வாறே நான்கு மாகாண சபைப் பிரிவுகளை சேர்த்து அதில் பாராளுமன்றத்திற்கு ஒரு பிரதிநிதியை நியமிக்க முடியும். இவ்வாறு எல்லை நிர்ணயப்படுத்தலின் மூலம் மக்கள் பிரதிநிதித்துவத்தைப் போன்றே நிருவாகத்தையும் ஒழுங்குபடுத்த முடியும்.

இப்போது சொல்லப்படும் முறையின் கீழ் மாகாணசபைக்குப் போட்டியிடுபவரும், பாராளுமன்றத்துக்குப் போட்டியிடுபவரும், பிரதிநிதித்துவப்படுத்தும் எல்லை ஒன்றாக இருக்கும். இருவரும் மாவட்டத்திலிருந்துதான் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு வருவார்கள். அப்போது மக்கள் தரப்பில், மாகாண சபைகள் உறுப்பினரொருவரிடமிருந்து எதிர்பார்க்கும் விடயத்தையேதான் பாராளுமன்ற உறுப்பினரொருவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றார்கள். உள்ளூராட்சி உறுப்பினராக இருந்தாலும், அவரும் மாகாண சபை உறுப்பினரினதும் பாராளுமன்ற உறுப்பினரினதும் வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. அவர்கள் அனைவரும் மக்கள் பிரதிநிதிகள். அனைவரும் வேலை செய்ய வேண்டும் என்ற விடயம். அதனால்தான் பாராளுமன்ற உறுப்பினர் சென்று கிராமத்திலுள்ள வீதிகளை அமைக்கின்றார். உள்ளூராட்சி உறுப்பினரொருவர் உலகம் முழுவதுமாக பெரிய அளவில் அரசியல் செய்யும் உறுப்பினராக மாறுகின்றார். எல்லை நிர்ணயத்துடன் வேலைசெய்யும் பிரிவு என்ன என்பது பற்றிய தெளிவைப் பெற்றக் கொள்ளவில்லை.

அதனால் இவையனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். 'சிஸ்டம் சேஞ்ச்' எனப்படுவது அரசியலமைப்பு மட்டுமல்ல. நிருவாகப் பிரிவை முழுமையான மாற்றத்துக்கு உள்ளாக்க வேண்டும்.

**இப்போது சொல்லப்படும் முறையின் கீழ் மாகாணசபைக்குப் போட்டியிடுபவரும், பாராளுமன்றத்துக்குப் போட்டியிடுபவரும், பிரதிநிதித்துவப்படுத்தும் எல்லை ஒன்றாக இருக்கும். இருவரும் மாவட்டத்திலிருந்துதான வாக்குகளைப் பெற்றுக் கொண்டு வருவார்கள். அப்போது மக்கள் தரப்பில், மாகாண சபைகள் உறுப்பினரொருவரிடமிருந்து எதிர்பார்க்கும் விடயத்தையேதான் பாராளுமன்ற உறுப்பினரொருவரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றார்கள்.**

# முழுமையான சீர்திருத்தமொன்று உடனடியாகத் தேவை

**வீரசுமன வீரசிங்ஹ**
பாராளுமன்ற உறுப்பினர் - ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன



1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பை 20 பிளாஸ்திரிகள் இட்டு முடித்துவிட்டு 21வது பிளாஸ்திரியையும் இடத் தயாரானார்கள். அது உயர் நீதிமன்றத்தில் நிராகரிக்கப்பட்டதுடன், 22வது பிளாஸ்திரி இப்போது பாராளுமன்றத்திற்கு வந்துள்ளது. 78ம் ஆண்டு அரசியலமைப்பு தயாரிக்கப்படுகின்ற நேரமே மக்களிடையே பாரிய எதிர்ப்பொன்று கிளம்பியது. அரசியலமைப்பைப் பற்றித் தெரிந்த அரசியலமைப்பை வரைவிலக்கணப்படுத்தக் கூடிய கட்சிகளும் குழுக்களும் மற்றும் கல்விமான்களிடையே அவ்வரசியலமைப்பு உருக்குலைந்த அரசியலமைப்பு என்ற விடயம் தோற்றம் பெற்றது. இது பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் அரசியலமைப்பில் காணப்படுகின்ற சில பகுதிகளைச் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஏகாதிபத்திய அரசியலமைப்பாகும். அதற்குள்ளே நடந்தவற்றை கடந்த நாற்பத்தி நான்கு ஆண்டுகளாக கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்கின்றோம். 1994 மற்றும் 1994ற்குப் பின்னர், அதிகாரத்துக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் புதிய அரசியலமைப்பொன்று என்ற விடயத்தை வாக்குறுதியாக அளித்தன. எனினும் கடந்து சென்ற இவ்விருபதாண்டு காலப்பகுதியில் அவ்வாக்குறுதியை நிறைவேற்று அதிகாரத்துக்கு வந்த எந்தவொரு ஆட்சியாளரும் உண்மையான ஆர்வத்தைக் காட்டவில்லை. அதற்குத் தேவையான

**இது பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் அரசியலமைப்பில் காணப்படுகின்ற சில பகுதிகளைச் சேர்த்து தயாரிக்கப்பட்ட ஏகாதிபத்திய அரசியலமைப்பாகும். அதற்குள்ளே நடந்தவற்றை கடந்த நாற்பத்தி நான்கு ஆண்டுகளாக கண்ணெதிரே பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.**

ஒத்துழைப்பு ஏனைய அரசியல் செயற்பாடுகளிடமிருந்து கிடைக்கவும் இல்லை.

இப்போதுள்ள 9வது பாராளுமன்றம் எமது நாட்டில் அரசியல் ரீதியாக உருக்குலைந்த பாராளுமன்றமாகும். இங்கு பெரிய விடயங்கள் எதனையும் எதிர்ப்பார்ப்பதற்கு வாய்ப்பில்லை. இவ்வுருக்குலைவில் மக்களின் மாபெரும் அழுத்தத்தை கடந்த சில மாதங்களில் காண முடிந்தது. அண்மைக்கால வரலாற்றில் முதன் முறையாக அரச தலைவரொருவரைத் துரத்தியடிக்கும் அளவிற்கு அம்மக்களின் எதிர்ப்பு தீவிரமடைந்தது. அதன்பின்னர் ஏற்பட்ட அரசியல் நிலைமைகளின் கீழ் இவ்வுருக்குலைந்த பாராளுமன்றத்திலிருந்து நாம் எதிர்பார்க்கின்ற மீட்சியளிக்கக் கூடிய சீர்திருத்தமொன்றை அவ்வாறே எதிர்பார்க்க முடியாது. ஆனால் இந்தத் தருணம், இந்த நெருக்கடி இந்த நாட்டில், இப்போதிருக்கின்ற சூழலை மாற்றியமைப்பதற்கு, ஏதேனுமொரு அரசியலமைப்பு ரீதியான மாற்றத்தில் இடையீடு செய்வதற்கு ஓரளவிற்குக் காரணமாக அமையும் என நாம் நம்புகின்றோம்.

## 22வது திருத்தம் நேர்மறையான படிமுறை

22வது அரசியலமைப்புத் திருத்தத்தை அரசாங்கம் இறுதி அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரித்துள்ளது. அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் கலந்துரையாடலுக்குப் பாத்திரமாகும். அதில் ஒருசில எண்ணிக்கையிலான சீர்திருத்தங்கள் காணப்படுகின்றன. இதற்கு முன்னிருந்த, 19 மற்றும் 20வது திருத்தங்களில் குறிப்பாக 19ஐக் கொண்டுவரும் நேரத்தில், மக்கள் உரிமைகள் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பொன்றிருந்தது. இவ்வனைத்து அரசியலமைப்புத் திருத்தங்களை எடுத்துக்கொண்டால், 19 ஓரளவிற்கு நேர்மறையான அரசியலமைப்புத் சீர்திருத்தமாகும். ஆனால் அத்துடன் அவர்கள் அன்று தேர்தல் முறைமை தொடர்பான சட்டத்தைக் கொண்டுவருவதாக உறுதியளித்தனர். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் அவர்களது காலத்தில் அதனை நிறைவேற்றவில்லை. அதனால் 20வது திருத்தமாக கடந்த அரசாங்கத்தின் போது நாங்களும் இடையீடு செய்த அரசு என்ற வகையில் 19வது திருத்தத்தை கொண்டுவர நேர்ந்ததேயொழிய தேவையான சீர்திருத்தங்களை அல்ல. அந்த நேரத்தில் விருப்பமின்றியேனும் நாங்களும் புதிய அரசியலமைப்பொன்றை ஒரு வருடத்திற்குள் கொண்டுவருவதாக கோட்டாபய ராஜபக்ஸ அவர்கள் அளித்த வாக்குறுதியின் பேரில் வாக்களிக்க நேர்ந்தது. எனினும் அதனை நிறைவேற்ற அவரால் இயலவில்லை. அதனால் இது உருக்குலைந்த நிலையை அடைந்துள்ளது. புதிதாக வந்த அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் 19க்குச் செல்வதைக் காணக் கிடைக்கின்றது. அது சாதகமான அறிகுறி.

**20வது திருத்தமாக கடந்த அரசாங்கத்தின் போது நாங்களும் இடையீடு செய்த அரசு என்ற வகையில் 19வது திருத்தத்தை கொண்டுவர நேர்ந்ததேயொழிய தேவையான சீர்திருத்தங்களை அல்ல. அந்த நேரத்தில் விருப்பமின்றியேனும் நாங்களும் புதிய அரசியலமைப்பொன்றை ஒரு வருடத்திற்குள் கொண்டுவருவதாக கோட்டாபய ராஜபக்ஸ அவர்கள் அளித்த வாக்குறுதியின் பேரில் வாக்களிக்க நேர்ந்தது.**

குறிப்பாக இந்த மக்கள் சமூகத்தில், வெளியேயுள்ள போராட்டத்தில் இரண்டு பிரதான காரணங்களை நாம் காண்கின்றோம். ஒன்று பொருளாதார பாதிப்பில் பாதிப்புக்கு உள்ளான மக்களின் குரல். அவ்வாறே சனநாயக ரீதியான சீர்திருத்தங்களைக் கோரும் குரலும் அதில் பிரதிநிதித்துவம் பெறுகின்றது. அதனால் பொருளாதார பிரச்சனைகளுக்கு பதில் தேடுவதைப் போன்றே, சனநாயக ரீதியான சீர்திருத்தம் தொடர்பான கேள்விக்கான பதிலை இந்த தருணத்தில் செய்ய வேண்டியுள்ளது. உத்தேச 22வது சீர்திருத்தம் அதன் சாதகமான படிமுறையாகும். ஆனால் 22வது சீர்திருத்தம் மட்டுமே போதுமானது அல்ல என்றுதான் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியாகிய நாம் நம்புகின்றோம். இங்கு பல சாதகமான விடயங்கள் உள்ளனதான். பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை அளித்தல், பாராளுமன்றத்தை வலுப்படுத்தல், மக்கள் நிறுவனம் என்ற வகையில் அதில் மக்கள் பங்கேற்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்,

அனைவரினதும் கருத்துகளை செவிமடுத்தல் உள்ளிட்ட சாதகமான காரணங்கள் பல உள்ளன.

## தேர்தல் முறைமையில் மாற்றம்

ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் 225 பேர் தொடர்பில் இன்று சமூகத்தில் நற்பெயர் இல்லை. அது நியாயமானதா அல்லது நியாயமற்றதா என தீர்மானிப்பதை ஒரு புறம் வைப்போம். ஆனால் 225மே வேண்டாம் என்றுதான் சித்தரிக்கப்பட்டுள்ளது. இங்கு காணப்படும் தேர்தல் முறைமையில் உண்மையான பிரதிநிதிகள் நியமிக்கப்படாதிருப்பதுதான் அதற்குக் காரணம். உண்மையான பிரதிநிதிகள் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவானது. அதனால் இந்த வாய்ப்புகளை இவ்வாறே வைத்துக் கொண்டு மேலுமொரு தேர்தலுக்கு இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை வருடத்தில் சென்றால் மீண்டும் ஒரு உருக்குலைந்த நிலையே ஏற்படும். எனவே இந்த 22வது திருத்தத்தைப் போன்றே இதனோடு இணைந்ததாக அதற்கு அண்மித்த வகையில் புதிய தேர்தல் முறைமையொன்றையும் வழங்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இந்த சனநாயக ரீதியான உரிமைகளுக்காக போராடிய மக்களின் குரலுக்கு ஓரளவுக்கேனும் நியாயம் கிடைக்க வேண்டுமாயின் அது அத்தியாவசியம். இல்லையேல் மீண்டும் உருக்குலைந்த சட்டவாக்க சபையொன்றுதான் உருவாகும்.

கடந்த பாராளுமன்றத்தில் புதிய தேர்தல் முறை தொடர்பில் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களின் தலைமையிலான குழுவொன்று நீண்ட கலந்துரையாடற் தொடரொன்றும் இடம்பெற்றது. கட்சிகளும் பல குழுக்களும் அதில் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் அவ்வறிக்கை உண்மையான அறிக்கையாக சிறந்த அறிக்கையாக வருவதற்கான வாய்ப்புகள் குறைந்தன. அக்குழுவில் கூடிய நபர்களின் தனிப்பட்ட நோக்கங்களை நிரூபிப்பதற்கு ஏதோவொரு முயற்சி எடுக்கப்பட்டது என்பது காணக் கிடைத்தது. எவ்வாறாயினும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் துரதிஷ்டவசமாக அக்குழுவில் 17 பேர் பெயரிடப்பட்டிருந்தாலும் அவ்வறிக்கையில் 8 பேர் மட்டுமே கையெழுத்திட்டுள்ளனர். அவ் 8 பேரும் முந்தைய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளும் அவர்களின் பிரதிநிதிகளும் ஆவர். ஏனைய கட்சிகளைச் சேர்ந்த யாரும் அவ்வறிக்கையில் கையெழுத்திட்டிருக்கவில்லை. ஆனால் அவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, அல்லது புதிய அரசியலமைப்புக்குப் பொருத்தமானவாறு தேர்தல் முறையில் சீர்திருத்தமொன்று இடம்பெறாவிடில் பெரும் துன்பியல் இடம்பெறும்.

## திருத்தங்களின் கீழ் ஒத்துழைப்பு வழங்குதல்

இவ் 9வது பாராளுமன்றம் இந்த நாட்டு அரசியல் வரலாற்றில் அதிகமாகப் பேசப்பட்ட பாராளுமன்றம். அப்பாராளுமன்றத்தில் இந்த சீர்திருத்தங்கள் சார்பில் செயலாற்ற முடிந்தால் மட்டுமே ஏதேனும் சாதகமான ஒரு விடயத்தையேனும் நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும். நாம் இலங்கையின் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ரீதியில் 22வது அரசியலமைப்புத் திருத்தத்தின் திருத்தங்களின் கீழ் ஒத்துழைப்பை வழங்க நாம் தயாராகவுள்ளோம். ஏனென்றால் விஜேதாச ராஜபக்ஸ அவர்கள் அன்று சுயாதீன குழுவின் உறுப்பினராக உறுப்பினர் பிரேரித்த அச் சட்டமூலமே மேம்படுத்தப்பட்டுள்ளது. அச்சட்டமூலத்தைத் தயாரித்த நேரத்தில் எமது கருத்துக்கள் மீதுதான் அவர் அதனைச் சமர்ப்பித்தார். அவர் அரசியலமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சர் என்ற வகையில் அதனை இப்போது சமர்ப்பித்துள்ளார். அது சாதகமான விடயம். அதனை உறுதியான வெற்றியாக நிறைவேற்றுவதற்கு எமது ஒத்துழைப்பை நாம் வழங்குவோம். அத்துடன் கட்சி என்ற வகையில் நாம் பிரதானமாக மக்களின் கருத்து பிரதிநிதித்துவப்படுத்தப்படும் முழுமையான

**அத்துடன் கட்சி என்ற வகையில் நாம் பிரதானமாக மக்களின் கருத்து பிரதிநிதித்துவப்படுத்தப்படும் முழுமையான அரசியலமைப்பையே கோருகின்றோம். இந்த பாராளுமன்றத்தால் அச் செயலை செய்ய முடிந்தால் அதுதான் மக்களுக்கு நாம் வழங்கும் நியாயம் என நான் நம்புகின்றேன். நாம் அதற்காக எதிர்வரும் கால எல்லைக்குள் அதிகபட்ச இடையீட்டை மேற்கொள்வோம்.**

அரசியலமைப்பையே கோருகின்றோம். இந்த பாராளுமன்றத்தால் அச் செயலை செய்ய முடிந்தால் அதுதான் மக்களுக்கு நாம் வழங்கும் நியாயம் என நான் நம்புகின்றேன். நாம் அதற்காக எதிர்வரும் கால எல்லைக்குள் அதிகபட்ச இடையீட்டை மேற்கொள்வோம்.

## அரசியலமைப்பிற்கான புதிய பிரேரணைகள்

ஒட்டுமொத்த போராட்டத்தில், இந்த நாட்டின் சனநாயகத்திற்கு கல்வியறிவுள்ள இளைஞர்களின் பங்கேற்கும் முறையொன்றை உருவாக்க வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையொன்று இருந்தது. இந்தப் பாராளுமன்றத்தில் அது மிகக் குறைவாகத்தான் இடம்பெற்றது. மக்களின் வாக்குகளால் கல்வியறிவுள்ள நபர்கள் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டார்கள் என்பது உண்மை. ஆனால் பாராளுமன்றச் செயற்பாடுகளில் அவர்களின் நேரடி பிரதிநிதித்துவம் இடம்பெறாமை தொடர்பில் சமூகத்தில் பேசப்பட்டது. 22வது அரசியலமைப்பு 19வது அரசியலமைப்புடன் இணைந்து செல்வதில் குறிப்பாக துறைசார் செயற்குழுக்களின் அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்பதற்கான விதிமுறையொன்று உருவாகும். ஒவ்வொரு அமைச்சுக்கும் தனியான ஆலோசனைச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டும் என்பதும் அவ்வாலோசனைச் சபையின் பிரதிநிதித்துவம் தொடர்பான விடயத்தில், தொழில்வாண்மையாளர்கள், விடயம் தொடர்பான நிபுணர்களைப் போன்றே மக்கள் சமூகத்திலிருந்து இளைஞர் பிரதிநிதித்துவமொன்றும் வழங்கப்பட வேண்டும் என்பதும் சுயாதீனக் கட்சி என்ற வகையில் நாம் பிரேரித்த விடயங்கள். நாம் வெளிப்படையாக போராட்டத்தில் கலந்து கொண்ட குழுக்களிலிருந்து, ஏதேனுமொரு பிரதிநிதித்துவம் இச் சபையில் உள்வாங்கப்பட வேண்டும் என ஆலோசனை விடுத்தோம். தேர்ந்தெடுக்கப்படும் விதிமுறை தொடர்பில் விரிவான கலந்துரையாடலொன்று இடம்பெற வேண்டும். ஆனால் இளைஞர்களின் குரல் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும்.

அச் சீர்திருத்தங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என நாம் பிரேரிக்கின்றோம். பாராளுமன்றத்தில் இடம்பெறும் தீர்மானமெடுக்கும் செயற்பாட்டில் மக்களதும் மக்கள் சமூகத்தின் கருத்தியலுக்கும் இடமளிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை நாம் பிரேரிக்கின்றோம். குறிப்பாக அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பில், விரிவான கலந்துரையாடலொன்று காணப்பட்டது. அது பாராளுமன்றத்தால் நடத்தப்பட வேண்டுமா? வெளிவாரிப் பிரதிநிதிகள் வர வேண்டுமா என்ற விடயம் கடந்த காலங்களில் கலந்துரையாடப்பட்டது. அங்கே நாம், வெளிவாரியாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளாக கல்விமான்கள், தொழில்வாண்மையாளர்கள், அவ்வாறான அமைப்புகளின் பிரதிநிதிகள் சட்டவாக்க சபையில் நியமிக்கப்பட வேண்டும் எனப் பிரேரித்தோம். வெளியே மக்கள் சமூகத்தில் காணப்படும் கருத்துகளுக்கான பாதை திறக்கப்படும் என நாம் நம்புகின்றோம். அது முழுமையான ஒன்றாக மாற வேண்டுமாயின் ஒட்டுமொத்த அரசியலமைப்பும் மாற்றம் பெற வேண்டும்.

## உள்ளக சனநாயகம்


புதிதாக அரசியற் கட்சியொன்றை பதிவு செய்வதுடன் தொடர்புடைய விதிமுறைகள் கூட மாற்றப்பட வேண்டும். சனநாயகம் வலுப்பெற வேண்டுமாயின் மக்கள் சமூகத்தினதும் சட்டவாக்கத்தினதும் சனநாயகம் மட்டுமன்றி உள்ளகக் கட்சி சனநாயகமும் வலுப்பெற வேண்டும். கட்சிகளின் நடத்தை பற்றி இந்நாட்டில் யாரும் பேசுவதில்லை. எனினும் கட்சித் தலைவர் தனிப்பட்ட ஒரு கம்பனியாக சில கட்சிகளை வழிநடத்துகின்றார். அதைத்தான் நாம் கடந்த காலங்களில் பார்த்தோம். எமது நாடு குடும்ப கம்பனியொன்று வழிநடத்தப்பட்டதைப் போன்று வழிநடத்தப்பட்டது. கட்சிகளை வழிநடத்துவதும் அவ்வாறே. கட்சிகளால் நாட்டை வழிநடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதும் அவ்வாறே. எனவே கட்சிகளில் சனநாயம் அத்தியாவசியமான நேரம். இதனால் தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளை பதிவு செய்யும் போது. கட்சியின் சனநாயகக் கட்டமைப்பு என்ன என்ற விடயத்தைப் பரீட்சிப்பதைப் போலவே ஏற்புடைய அரசியலமைப்புக்கு ஏற்ப, செயற்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்ப்பதும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பொறுப்பாக மாறுகின்றது. நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற கம்யூனிஸ்ட் கட்சியானது உள்ளக சனநாயகத்திற்கு மதிப்பளிக்கின்ற ஒரு அரசியற் கட்சி. எமது யாப்பில் அடிமட்ட உறுப்பினரின் கருத்து கட்சியின் செயலாளர் வரை செல்கின்ற விதிமுறையொன்று உருவாகி வருகின்றது. சட்டவாக்க மாநாடுகளின் ஊடாகத்தான் தமது கட்சித் தலைவர் மற்றும் தலைமைத்துவக் குழு தேர்ந்தெடுக்கப்படுகின்றது. ஏனைய கட்சிகளில் இந்த முறை உள்ளதா இல்லையா என்ற விடயம் எம்மில் யாருக்கும் தெரியாது. கட்சி உள்ளக சனநாயகம்

வலுப்பெறும் வரை இந்த நாட்டின் மக்கள் சமூகம் உண்மையான சனநாயகத்தையும் உரிமைகளையும் வென்றெடுப்பது இயலாத காரியம்.

இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இல்லாதிருப்பின் எமது நாடு மேலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. மேலும் நான்கைந்து ஆண்டுகளில் 80 வருட சாபம் எனச் சொல்வார்கள். இன்னுமொரு 10 ஆண்டுகளில் 90 வருட சாபம் என்று சொல்வார்கள். இது இப்படியே தொடர்ந்து செல்லுமேயொழிய, முன்னோக்கிய பயணமொன்று இல்லை. எனவே இவ்வொட்டுமொத்த சட்டவாக்கத்தின் மொத்த உருவத்திற்குமான முழுமையான மாற்றம் உடனடியாக ஏற்பட வேண்டும்.

# கூட்டமைப்பு அரசியலமைப்பே
# எமது முன்மொழிவு

**சீ. வீ. விக்னேஸ்வரன்**
பாராளுமன்ற உறுப்பினர் - தமிழ் மக்கள் தேசிய கூட்டணி



இனங்களின் நிறம் எதுவானாலும், நாட்டில் வாழும் மக்கள், முறையில் மாற்றமொன்றைக் கோரி நிற்கின்றார்கள். அப்படியிருந்தும் அவர்களுக்குத் தேவையான மாற்றம் தொடர்பில் உடன்பாடொன்றும் இல்லை. சுதந்திரம் கிடைக்கப்பெற்ற காலத்தில் கட்டியெழுப்பப்பட்டதும், அதன் பின்னர் தொடர்ந்து காணப்பட்டதுமான அரசியல், சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு பரிதாபகரமான முறையில் தோல்வியடைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. குறிப்பாக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட இனத்தை மையமாகக் கொண்ட கொள்கைகள் இதுவரை காலமும் பேணப்பட்டு வந்த உட்கட்டமைப்பை அழித்துவிடுவதில் பங்காற்றியுள்ளன. நாட்டின் சுபீட்சத்திலும் நலனிலும் பங்கேற்கக் கூடிய பலர் கலவரங்களாலும் சம்ஹாரங்களாலும்

**உலகம் முழுவதும் நவீன அரசுகள் நவீன முற்போக்கு முகாமைத்துவம் மற்றும் நிருவாகத் தொழில்நுட்பங்களினதும் கோட்பாடுகளினதும் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. ஒட்டுமொத்த இனமும், நூற்றுக்கு நூறு வீதம் ஒரே இனமாக , மொழியாக, இனம் மற்றும் மதக் குழுக்களைக் கொண்டதாக இல்லாதிருப்பின், சிறுபான்மைக் குழுவினரின் தேவைகளைப் பாதுகாக்கும் தேவை அரசியலமைப்பு உருவாக்கத்தில் முக்கிய அங்கமாக மாறுகின்றது.**

விரட்டியடிக்கப்பட்டனர். எவ்வாறாயினும் இன்று நாடு வங்குரோத்து நிலைமையில் வீழ்ச்சியடையும் போது, அவர்கள் வெளிநாட்டுச் சூழலில் சிறப்பாக வாழக் கூடியதாக உள்ளது.

உலகம் முழுவதும் நவீன அரசுகள் நவீன முற்போக்கு முகாமைத்துவம் மற்றும் நிருவாகத் தொழில்நுட்பங்களினதும் கோட்பாடுகளினதும் அடிப்படையிலேயே செயற்படுகின்றன. ஒட்டுமொத்த இனமும், நூற்றுக்கு நூறு வீதம் ஒரே இனமாக , மொழியாக, இனம் மற்றும் மதக் குழுக்களைக் கொண்டதாக இல்லாதிருப்பின், சிறுபான்மைக் குழுவினரின் தேவைகளைப் பாதுகாக்கும் தேவை அரசியலமைப்பு உருவாக்கத்தில் முக்கிய அங்கமாக மாறுகின்றது. சிறுபான்மையானது இருவகைப்படும். ஒரு குழுவானது பெரும்பான்மைக்கிடையில் எல்லா இடங்களிலும் பரந்துபட்டு வாழ்வதுடன், அவர்கள் பெருமளவிலான பெரும்பான்மையில் சிறுபான்மையாகவே கருதப்படுவர். இன்னுமொரு குழு அது வாழும் பிரதேசத்தில் தெளிவாகப் பெரும்பான்மையாகக் காணப்பட்டாலும், வெளிப்பாடையாக அல்லது இரகசியமாக இடம்பெறும் கட்டாயப்படுத்தல்கள் ஊடாக நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பெரும்பான்மையோடு இணைவதற்கு விதிக்கப்பட்டிருப்பதுடன் பிடிவாதமாக சிறுபான்மையினர் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தமது வசிப்பிடத் தாயகத்தின் பெரும்பான்மை எனினும் எளிமையான கணித ரீதியில் சிறுபான்மையினராக மாற்றப்பட்டிருக்கின்றார்கள். இலங்கையில் தமிழ் மக்கள் இரண்டாவதாகச் சொல்லப்பட்டிருக்கின்ற வகைக்குள் உள்ளடங்குகின்றார்கள்.

இந்தத் தீவின் ஆரம்பகால குடிகளான அவர்கள் வரலாற்றின் ஆரம்பம் முதலே இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் குடியிருந்து வருவதுடன் இன்றளவிலும் அந்தப் பிரதேசங்களின் பெரும்பான்மையினராவர். தமக்கேயுரிய மொழி, கலாசாரம், வாழ்க்கை முறை மற்றும் மதம் என்பன அவர்களுக்கு உண்டு. நாட்டைப் பற்றி சரியாகவும் உண்மையாகவும் எழுதப்பட்ட வரலாறொன்று இல்லாமையே பெரும்பான்மை சிங்கள மக்கள் இன்று முகங்கொடுத்துள்ள பிரதான பின்னடைவாகும். அது உள்நாட்டு மற்றும் சர்வதேச வரலாற்று அறிஞர்கள் குழுவொன்றினால் எழுதப்பட்டிருந்தால், இலங்கைத் தமிழ் மக்களுக்கு வரலாற்றில் உரித்தான இடத்தை சிங்கள மக்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கலாம். வரலாற்றில் ஆரம்பத்திலிருந்தே அவர்களுடைய பண்டைய நிலையை மறந்து இப்போது பெரும்பாலான சிங்களவர்கள் தமிழ் மக்கள் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் சோழர் படையெடுப்புக் காலத்தில் இந்நாட்டுக்கு வந்த அண்மைக்கால புலம்பெயர்ந்தவர்கள் என்றே நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பின் ஊடாக நாட்டின் ஒட்டுமொத்தப் பெரும்பான்மைக்கு கணிசமான அளவு அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதுவரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களின் உரிமைகள் கடுமையான முறையில் அடக்கப்பட அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் சாசனத்தின் 1ம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுயநிர்ணயத்திற்கான மக்களின் உரிமையின் ஊடாக பெரும்பான்மை என்று சொல்லிக் கொள்ளும் சிங்கள மக்களால் தமிழ் மக்கள் இரண்டாம் மட்டப் பிரசைகளாக மாற்றப்பட்டிருப்பதே இதுவரை இடம்பெற்றிருக்கின்றது. முறையில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியின் போதும் இப்பிரச்சனையை பாரதூரமான முறையில் கருத்திற் கொள்ள வேண்டும். தமிழ் மக்களாகிய நாங்கள், சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியிலேயே நின்றோம். பிரித்தானியரால் சுதந்திரம் வழங்கப்பட்ட போது நாம் சிங்களவர்களிடமிருந்து நியாயத்தை எதிர்பார்த்தோம்.

**நாட்டைப் பற்றி சரியாகவும் உண்மையாகவும் எழுதப்பட்ட வரலாறொன்று இல்லாமையே பெரும்பான்மை சிங்கள மக்கள் இன்று முகங்கொடுத்துள்ள பிரதான பின்னடைவாகும். அது உள்நாட்டு மற்றும் சர்வதேச வரலாற்று அறிஞர்கள் குழுவொன்றினால் எழுதப்பட்டிருந்தால், இலங்கைத் தமிழ் மக்களுக்கு வரலாற்றில் உரித்தான இடத்தை சிங்கள மக்களால் புரிந்து கொள்ளப்பட்டிருக்கலாம்.**

அப்படியிருந்த போதும் அதிகாரத்துக்கு வந்தபின்னர், சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களை அகற்றிவிட்டு தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவிருந்த பிரதேசங்கள் உள்ளிட்ட முழு நாடும் உள்ளடங்குகின்றவாறு பெரும்பான்மையின் ஏகாதிபத்தியத்தை அமைத்தார்கள். இதுவரை பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் ஒட்டுமொத்த பெரும்பான்மை மக்களின் அரசியல்வாதிகளினுடைய அவ்வாறான தொலைநோக்கற்ற கொள்கைகள் காரணமாக நாம் முப்பது வருட யுத்தத்திற்கு முகங்கொடுக்க நேர்ந்தது. எனவே முப்பது வருட யுத்தம் ஏற்படுவதற்கான காரணிகளைப் பேணிச் செல்லுதல் ஒரு நாட்டின் சாபமாகும்.

அதனால் முறைமையில் மாற்றத்தைச் செய்வதற்காக அரசியலமைப்பு உருவாக்கத்தில் எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியிலும் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பெரும்பான்மையான தமிழ் மக்களின் அபிலாசைகளைக் கருத்திற் கொள்ள வேண்டும். இதற்கு அப்பால் ஒற்றையாட்சி அரசியலமைப்பொன்றை நடத்திச் செலலுதல், நாடு தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமாக் கூடும் என்பதால் எமது கட்சி கூட்டமைப்பு அரசியலமைப்பொன்றையே (confederal) முன்மொழிகின்றது. ஒற்றையாட்சி அரசியலமைப்பொன்றின் மூலம், தத்தமது பிரதேசங்களில் பெரும்பான்மையாக இருக்கும் மக்கள் அடிமைத் தனத்திற்கும் புறக்கணிப்பிற்கும் ஆளாக்கப்படக் கூடியதுடன், அவர்களை ஒட்டுமொத்த பெரும்பான்மைக்குச் சார்பாக மாற்றப்படலாம்.

கூட்டமைப்பு (Confederal) அரசியலமைப்பும் கூட்டாட்சி (federal) அரசியலமைப்பும் பின்வருமாறு வேறுபடுகின்றன. கூட்டமைப்பு அரசியலமைப்பொன்றில் இறையாண்மை அங்கத்துவ அரசுகளுக்கு அல்லது பிரிவுகளுக்கே உரித்தாகும். அதற்கேற்ப, மத்திய அரசாங்கம் அங்கத்துவ பிரிவுகளுக்கு பொறுப்புக் கூற நேரிடும். கூட்டாட்சி முறையில் மத்திய அரசாங்கத்திற்கு இறையாண்மை உரித்தாகின்றது. அங்கத்துவப் பிரிவுகள் மத்திய அரசுக்குக் கீழ்ப்படியலாம். எனவே, புதிய அரசியலமைப்பொன்று இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகள் அங்கத்துவப் பிரிவாக அமைகின்றவாறும் அதற்கு சுய நிர்ணயம் உரித்தாகின்ற வகையிலும் கூட்டமைப்பு அரசியலமைப்பாக உருவாக்கப்பட வேண்டியுள்ளது. முறைமையில் மாற்றமொன்றை ஏற்படுத்த எதிர்பார்க்கும் புதிய அரசியலமைப்பொன்றில் ஒற்றையாட்சி அரசியலமைப்பிலிருந்து கூட்டமைப்பு அரசியலமைப்பாக மாற வேண்டியது அத்தியாவசிய அங்கமாகும்.

**இதற்கு அப்பால் ஒற்றையாட்சி அரசியலமைப்பொன்றை நடத்திச் செலலுதல், நாடு தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமாக் கூடும் என்பதால் எமது கட்சி கூட்டமைப்பு அரசியலமைப்பொன்றையே (confederal) முன்மொழிகின்றது. ஒற்றையாட்சி அரசியலமைப்பொன்றின் மூலம், தத்தமது பிரதேசங்களில் பெரும்பான்மையாக இருக்கும் மக்கள் அடிமைத் தனத்திற்கும் புறக்கணிப்பிற்கும் ஆளாக்கப்படக் கூடியதுடன், அவர்களை ஒட்டுமொத்த பெரும்பான்மைக்குச் சார்பாக மாற்றப்படலாம்.**

சர்வதேச சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறான தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை இதுவரை காலமும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பில் இதுவரை பிரதிபலிக்கப்படவில்லை. 70 வருடங்களுக்கு அதிக காலமாக இலங்கை தமிழ் மக்கள் சீர்திருத்தங்களுக்காக ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். தமிழ் பேசும் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில், பெரும்பான்மையாக காணப்பட்ட போதும், சிங்கள பௌத்த ஆதிக்கவாத கருத்தியல், சீர்திருத்தத்திற்கு நெகிழ்வான வாய்ப்பை அளிக்கவில்லை. அதிகாரிகளிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் மாத்திரமே அதில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அந்தப் புரிதலை அறிவாலும் அனுபவத்தாலும் பெற்றுக் கொள்ள முடியும். அறிவுபூர்வமான சட்டத்துடன் தொடர்புடைய பேராசிரியர்கள் கூட, இதுவரை இலங்கையில் சிங்கள பௌத்த கருத்தியலின் தற்கொலைக் கொள்கைகளையே பின்பற்றியுள்ளனர். அனுபவங்கள்

மூலம் சிங்கள பௌத்தர்களுக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக் கொடுக்கப்படுகின்றது என்பதைக் காண முடிகின்றது. அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதலும், நாட்டு வளங்களைக் கொள்ளையடிப்பதற்காக தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக அவர்களை முறையே பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளாகக் காண்பித்து வெளியிட்ட அச்சுறுத்துகின்ற அறிக்கைகளை இப்போது புரிந்து கொண்டுள்ளார்கள். சிறுபான்மைக்கு எதிரான உணர்வுகளின் அதிர்வுகளைத் தொடர்ந்து பேணிச் செல்லுகின்ற அரசியல்வாதிகள், அவர்களின் நன்மைக்காக வேண்டுமென்றே உருவாக்கிய அவ்வாறான உன்மத்தத்தின் போர்வையின் கீழ் நாட்டைக் கொள்ளையடிப்பதில் ஈடுபடுகின்றார்கள்.

போராட்டம் அவ்வாறான அரசியல்வாதிகளிடமிருந்து மீள்வதற்கான இயக்கமாகும். அவ்வாறான நடவடிக்கையொன்றின் மூலம், மக்களின் அபிலாசைகளை உண்மையாகப் பிரதிபலிக்கின்ற அரசியலமைப்பொன்றைக் கொண்டு வருவதற்கு எந்தளவுக்கு இயலுமாக இருக்கும் என்பதை எதிர்காலத்தில் காணக் கூடும். எவ்வாறாயினும், தமது அபிலாசைகளைப் பிரதிபலிக்கின்ற அரசியலமைப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு பாதிக்கப்பட்ட மக்கள் சீர்திருத்தத்திற்காக தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டியேற்படும்.

## பின்குறிப்பு

இத்தொடர் கந்துரையாடலுக்காக, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொள்ள நாம் எதிர்பார்த்தோம்.

பெரும்பாலானோர் மிகுந்த ஆர்வத்துடன் இதில் கலந்துகொண்டாலும் சில தரப்பினர் வழங்கிய பதில் கவலைக்குரியதாகவே அமைந்தது. அரசாங்கத்தின் ஒரு தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் டலஸ் அலஹப்பெரும, பேராசிரியார் ஜி. எல். பீரிஸ் மற்றும் பேராசிரியர் சரிதா ஹேராத் ஆகிய மூவரில் ஒருவர் கருத்து தெரிவிக்க உடன்பட்டிருந்த போதும் அதற்காக பாரிய முயற்சிகளை மேற்கொண்டும் அது பயனளிக்கவில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன மற்றும் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் ஜீவன் தொண்டமான் ஆகியோரை கருத்து தெரிவிப்பதற்கு அழைத்தும் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க கருத்து தெரிவித்தவர், அவரது கட்சி உட்பட பதினொரு கட்சிகளின் கருத்தையும் அது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

VOICE OF CITIZENS

CPA

Centre for Policy Alternatives

www.facebook.com

www.twitter.com

www.youtube.com